பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 10, செவ்வாய்க்கிழமை 26.09.2017 கதிர் 324

## பெரிய வெங்காயம் இறக்குமதிக்கு 100 வீத வரி விதிப்பு

கொழும்பு, செப்.26

இறக்குமதிசெய்யப்படும்பெரிய வெங்காயத்துக்கு நூறு வீத வரி விதிக்கும்படி நிதி அமைச்சைப் பணித்திருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. உள்ளூர் பக்கம் 18

# திருக்கேதீஸ்வரத்தில் விகாரை; ஜனாதிபதியே வந்து திறப்பதா?

## கறுப்புக் கொடி ஏந்தி முற்றுகைப் போராட்டம் மன்னார் பொது அமைப்புகள் ஒன்றியம் அறிவிப்பு

மன்னார், செப்ரெம்பர் 26

மன்னார் மாந்தை திருக் கேதீஸ்வரம் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான பத்து ஏக்கர் காணியை அபகரித்து பௌத்த விகாரை கட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அந்த விகாரை திறப்பு நிகழ்வுக்கு இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வருகின்றமை ஏற்புடையது அல்ல என்று சுட்டிக்காட்டியுள்ள மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம்,அந்த வேண்டு கோளைப் புறக்கணித்து அத் திறப்பு விழா நடந்தால் ஜனநாயக ரீதியில் கறுப்புக் கொடி ஏற்றி முற்றுகைப் போராட்டம் நடத்துவோம் என்றும் எச்சரித்துள்ளது. பக்கம் 18

## தியாக தீபம் திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவு



யாழ்ப்பாணம், செப்.26

ஒருசொட்டுத்தண்ணீர் கூட அருந்தாமல் பன்னிரண்டுநாள்கள்உண்ணா நோன்பிருந்து சாவைத் தழுவிக் கொண்ட தியாக தீபம் திலீபனின் முப்பதாவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

தாயகத்திலும், புலம் பெயர் தேசங்களிலும் இன்று திலீபன் நினைவு தினநிழ்வுகள்உணர்வுபூர்வமாக இடம்பெறுகின்றன. பக்கம் 18

## ஜெயலலிதா மரணம் குறித்து விசாரிக்க தனிநபர் ஆணையம்

### தமிழக அரசு நேற்று அறிவிப்பு



சென்னை, செப்.26

தமிழகமுன்னாள்முதல்வர் ஜெயலலிதாவின் மரணம்குறித்துவிசாரிப்பதற்கு ஓய்வு பக்கம் 18

## அமெ. விஜயத்தை முடித்து நாடு திரும்பினார் மைத்திரி

கொழும்பு, செப். 26

ஐ.நா. பொதுச் சபையின் 72 ஆவது அமர்வில் பங்குபற்றுவதற்காக அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் நாடு திரும்பினார்.

2015 ஜனவரியில் இலங்கை ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ஐ.நா. பொதுச் சபை நிகழ்வில் பங்குபற்றிஅவர்உரையாற்றியமை இது மூன்றாவது தடவையாகும். பக்கம் 18

## ஜெனீவாவில் வைகோவுடன் தகராறு செய்ய முயற்சியாம்!

சென்னை, செப்.26

ஜெனீவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலின் பிரதான அரங்கத்துக்குள் வைத்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர்வைகோவுடன் சிங்களவர்கள் சிலர் தகராறு செய்ய முயன்றனர் என சென்னையில் ம.தி. பக்கம் 18

## 3 தமிழ் அரசியல் கைதிகள் அ'புரத்தில் உணவு தவிர்ப்பு

அநுராதபுரம் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளஅரசியல்கைதிகள் மூவர் நேற்று முதல் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

அநுராதபுரம் சிறைச் சாலை யில் உள்ள அரசியல் கைதிகளான யாழ்ப் பாணத்தை சேர்ந்த இராசதுரை திருவருள், கரணவாயைச்சேர்ந்தமதியரசன் சுலக் பக்கம் 18

## எரிவாயு விலை ரூ.110 அதிகரிப்பு

நேற்றுநள்ளிரவுமுதல் அமுலுக்கு வரும் வகையில்லிற்றோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 110 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்படி இன்று முதல் 12.5 கிலோ கிராம் எடையுடைய எரிவாயு 1431ரூபாவுக்கே விற்பனையாகும். தற்போது சந்தையில் 1321 ரூபாவுக்கு எரிவாயு விற்பனையாகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இடைக்கால அறிக்கை குறித்து தமிழ் மக்கள் பேரவை ஆராய்வு

### மக்களுக்குத் தெளிவுபடுத்தவும் தயாராகிறதாம்

அரசமைப்பு உருவாக்கத்துக்கான நாடாளுமன்ற வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக ஆராய்ந்து கள நிலைமையை விளக்குவதற்கு தமிழ் மக்கள் பேரவை விரைவில் கூடவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதற்குமுன்னோடியாக தமிழ்மக்கள்பேரவையின் அரசியல் உபகுழு இடைக்கால அறிக்கையை ஆராயும்பணியில்ஈடுபட்டுள்ளதாகதமிழ் மக்கள்பேரவை பக்கம் 18

## சிரேஷ்ட டி.ஐ.ஜியான ஜயசிங்க மீண்டும் கைது!



கொழும்பு, செப்.26

வித்தியா கொலை வழக்கின் பிரதான சந்தேக நபர்களில் ஒருவரான சுவிஸ்குமாரைத் தப்ப வைத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கும் முன்னாள்சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க நேற்று மீண்டும் இன்னொரு வழக்குத் தொடர்பாக கைது செய்யப்பட்டார். கடந்த 2015 பக்கம் 18

## ஒரு குற்றம் விசாரிக்கப்பட்டு முடிவடைய 17 வருடங்கள்!

### இதுதான் இலங்கையில் நீதி நிலைமை

கொழும்பு, செப்.26

ஒருகுற்றவழக்குஇலங்கை யில் விசாரித்து முடிவுக்குக் கொண்டுவரப்படுவதற்கு 17 வருடங்கள்பிடிக்கின்றனவாம்!

குற்றவியல் சட்ட நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதுதொடர்பாகநடத்தப்பட ஓர் ஆய்வறிக்கை பிரதி அமைச்சர் அஜித் பெரேரோவினால் நாடாளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்பட்டது. அதிலேயே இந்த விடயம்தெரிவிக்கப்பட்டுள்ளது. பக்கம் 18

## வடக்கு பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பிரச்சினை மருத்துவ சேவைப் போராட்டமாக வெடிக்கும் ஆபத்து!

### நேற்றும் இன்றும் அவர்கள் நாடளாவிய ரீதியில் சுகவீன லீவில்

யாழ்ப்பாணம், செப்.26

வடக்கு மாகாணத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஐவர் பணியிலிருந்து நிறுத்தப்பட்டமை நீதிமுறையற்ற செயல் எனச் சாடியிருக்கும்பொதுச்சுகாதாரப்பரிசோதகர்கள் சங்கம், அதனை ஆட்சேபித்தும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் நேற்றும் இன்றும் இரண்டு நாள் அடையாள சுகவீனப் போராட்டத்தில் குதித்துள்ளது.

இதனிடையே இந்த விவகாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் என்றவட்டத்தைத்தாண்டி இணைந்த மருத்துவ சேவைத் தொழில் சங்கங்களின் கூட்டுப் போராட்டமாக வெடிக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக விடமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடல் மூலம் தீர்வைக் காண்பதற்குத் தாங் பக்கம் 18

# யாழ்.முஸ்லிம்களுக்கு வீடுகள் வழங்குவது அரசு நமக்குச் செலுத்தவேண்டிய கடன்!

## அந்த மக்கள் மத்தியில் அய்யூப் அஸ்மின் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,செப்.26

யாழ்ப்பாண முஸ்லிம் மக்களுக்கான வீட்டுத்திட்டங்கள் அவர்களது அடிப்படை உரிமையாகும் என நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற முஸ்லிம் பொதுமக்கள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்ட மக்கள் சந்திப்பில்தீர்மானிக்கப்பட்டது.

யாழ் முஸ்லிம் வீட்டுத்திட்ட இயக்கத்தால் இந்த மக்கள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதிலே கலந்துகொண்ட முஸ்லிம் மக்கள் பின்வரும் மூன்று முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்:-

தற்போது மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள நீண்டகால அகதிகளை மீள்குடியேற்றுவதற்கான விசேட செயலணியால் யாழ். மாவட்ட முஸ்லிம் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 200 வீட்டுத்திட்டங்களும் முழுமையாக மீள்குடியேறுகின்ற முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படுதல் அவசியமாகும்.

இதனைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் தடைகளை நீக்கும் நோக்குடன் யாழ்.மாவட்ட அரச அதிபர், மீள்குடியேற்ற அமைச்சின் அதிகாரிகள் மற்றும் புத்தளம், கம்பஹா ஆகிய பிரதேசங்களின் அரச அதிபர்கள் ஆகியோரைச் சந்தித்து நிலைமைகளை எடுத்துரைத்தல்.

மேற்படி சந்திப்புகளின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு தேவையேற்படின் தொடரான மக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தல்.

- ஆகியனவே அந்தத் தீர்மானங்களாகும்.

இந்த நிகழ்வில் விசேட உரை நிகழ்த்திய வடக்கு மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் -

இவ்வாறான மக்கள் சந்திப்புகள் வரவேற்கத்தக்கவை. வீட்டுத்திட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் எமது மக்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் ஒரு வீடு முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட்டது. 'எம்.எப்.சீ.டீ.' என்னும் முஸ்லிம் நிறுவனம், முஸ்லிம் மக்களுக்கான வீடமைப்புத் தேவைகளை நிறைவேற்ற முன்வந்த போதிலும் அதிகாரிகள் அந்த நிறுவனத்தின் செயற்பாடுகளுக்குப் பல்வேறு இடையூறுகளை மேற்கொண்டமையால் அந்த நிறுவனம் தனது கருத்திட்டத்தை விட்டுவிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி விட்டது. அவர்களால் 7 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.

அடுத்து இந்திய அரசு, யாழ்ப்பாண முஸ்லிம் களுக்கு 300 வீடுகளை வழங்கும் என வாக்குறுதியளித்திருந்தது. ஆனால், அதிகாரிகள் வெறும் 47 வீடுகளை மாத்திரமே யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கு வழங்கினார்கள்.

அடுத்து மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டத்தின் கீழ் 28 வீடுகள் வழங்கப்பட்டன. இப்போது மீள்குடியேற்ற செயலணியின் 200 வீட்டுத் திட்டங்கள் வந்திருக்கின்றன என்னுடைய பிரத்தியேகமான கணிப்பின் பிரகாரம் 30இற்கும் குறைவான வீடுகளே நமது மக்களுக்கு வழங்கப்படும் வாய்ப்பு இருக்கின்றது. இந்நிலை தொடர நாம் அனுமதிக்க முடியாது.

வீட்டுத்திட்டம் என்பது எமக்கான அடிப்படை உரிமை. இங்கிருந்து வீடுவாசல்களை விட்டுச் சென்ற மக்களுக்கு வீடுகளை வழங்கவேண்டியது அரசின் கடமையாகும், இதனைத் தடுக்கும் உரிமை எவருக்கும் கிடையாது. நாம் வீட்டுத் திட்டங்களைப் பிச்சை பெறுவதைப் போன்று பெற வேண்டிய அவசியம் கிடையாது. அது அரசு எமக்குத் திருப்பித்தரவேண்டிய கடனாகும். அதனை நாம் உரிமையோடு பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு யாழ்ப்பாண முஸ்லிம்கள் முறையான முயற்சிகளை மேற்கொள்ளுதல் அவசியமாகும். அவ்வாறு முறையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது அதற்கு எம்மாலான ஒத்துழைப்புகளை நாம் வழங்குவோம். - என்றும் குறிப்பிட்டார்.

ஜனாம் கே.எம். நிலாம் தலைமையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும். (உ)

## சு.கட்சிப் பிளவுறுவதை தடுக்கத் தீவிர முயற்சி

### அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறுகிறார்



கொழும்பு,செப்.26

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவடையாமல் இருப்பதற்கு சகல வழிகளிலும் முயற்சிக்கப்படும் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியை முன்னோக்கி நகர்த்துவதற்குத்தேவையானசகலவழிகளிலும் முயற்சிகள் எடுக்கப்பட உள்ளன எனக் குறிப்பிட்டுள்ள அவர், கட்சியை பிளவடையச் செய்ய சில தரப்பினர் மேற்கொண்டு வரும் முயற்சிகள் முறியடிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். கட்சியைப் பாதுகாப்பதற்காக முடிந்தளவு முயற்சிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## பதில் பொலிஸ் மா அதிபராக டி.ஐ.ஜி. விக்ரமரத்ன நியமனம்



கொழும்பு,செப்.26

நேற்று முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை பதில் பொலிஸ் மா அதிபராகச் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர வெளிநாட்டுப் பயணம் ஒன்றில் ஈடுபட்டிருக்கின்றமையின் காரணமாகவே இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சீனாவில் நடைபெறவிருக்கும் 86 ஆவது சர்வதேச பொலிஸ் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர நேற்றுக் காலை பயணமானார் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (உ)

## கிழக்கு மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த மு.கா. வற்புறுத்து

கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் துரித கதியில் நடத்தப்பட வேண்டும் எனஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் கட்சி கோரியுள்ளது.

மாகாணசபையின் அதிகாரங்கள் ஆளுநரிடம் ஒப்படைக்கப்படுகின்றமையைத் தாங்கள் விரும்பவில்லை என கட்சியின் பொதுச் செயலாளர் நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஆளுநரிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டால் மக்கள் பிரதிநிதிகள் அரசியல் அதிகாரத்தை இழக்க நேரிடும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், தேர்தல் நடத்தப்பட்டால் நிச்சயமாகத் தமது கட்சி வெற்றியீட்டும் எனத் தங்களுக்கு நம்பிக்கை உண்டு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தேர்தலைத்துரித கதியில் நடத்துமாறு அரசைத் தமது கட்சி கோரியுள்ளது எனவும் நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார். (உ)

## மாலைதீவில் சிறையிலிருக்கும் இலங்கையரை விடுவிக்க மறுப்பு

### அந்நாட்டு ஜனாதிபதியைக் கொல்ல முயன்றாராம்

மாலைதீவு ஜனாதிபதியைக் கொலை செய்ய முயற்சித்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்ட இலங்கையரை விடுவிக்க மாலைதீவு மறுத்துள்ளது.

இந்தத் தகவலை மாலைதீவின் வெளியுறவு அமைச்சின் தரப்புக்கள் அந்த நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களத்தை மேற்கோள் காட்டி வெளியிட்டுள்ளன.

இந்த இலங்கையர் மிக முக்கிய குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளமையால் அவரை விடுவிக்க முடியாது என்று அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையர் சினைப்பர் மூலம் மாலைதீவின் ஜனாதிபதியைக் கொலைசெய்ய முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளார்.

லஹிரு மதுருசிங்க என்ற இவர், கருவாட்டு விற்பனையில் ஈடுபட்டு வந்த நிலையிலேயே மாலைதீவு அதிகாரிகளால் கடந்த வருடம் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிதாக 17 ஆயிரம் புற்றுநோயாளிகள் வருடாந்தம் இனங்காணப்படுகின்றனர்

## அவர்களில் மார்பகப் புற்றுநோயாளிகளே அதிகம்

கொழும்பு, செப். 27

நாட்டில், ஆண்டுதோறும் 17 ஆயிரம் புற்றுநோயாளிகள் புதிதாக இனங்காணப்படுகின்றனர் எனவும் அவர்களில் 15 சத வீதமானோர் மார்பகப் புற்று நோயாளிகள் எனவும் சுகாதார அமைச்சின் தேசிய புற்றுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது. நாளுக்கு 6 -7 பேர் வரை மார்பக புற்று நோயாளிகள் புதிதாக இனங்காணப்படுகின்றனர். 45 முதல் 60 வயது வரையான பெண்களே பெரும்பாலும் மார்பகப் புற்றுநோயின் பாதிப்புக்கு உள்ளாகின்றனர் எனவும் இந்தப் பிரிவின் சிறப்பு மருத்துவரான டாக்டர் நைனா டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

புற்றுநோயை ஆரம்ப கட்டத்தில் இனங்கண்டுவிட்டால்சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும். பெரும்பாலானோர் 3ஆம், 4ஆம் கட்டங்களில், அதிக காலத்துக்குப் பிறகு தாமதமாகி சிகிச்சைக்கு வருவதால் குணப்படுத்துவது கடினமாகி விடுகிறது. 5 வருடங்கள் கூட அவர்கள் உயிரோடு இருப்பது கடினம் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் அரசு வைத்தியசாலைகளில் 800 புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் சிகிச்சை மையங்கள் செயல்படுகின்றன. அதன் மூலம் மக்கள் தங்களுக்கு எழுகின்ற சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளலாம் என்று தேசிய புற்றுநோய் தடுப்புப் பிரிவு கூறுகின்றது.

இலங்கையில் ஆண்டுதோறும் 2 ஆயிரத்து 500 மார்பக புற்றுநோயாளிகள் உட்பட சுமார் 17 ஆயிரம் அனைத்து வகையிலான புற்றுநோயாளிகள் புதிதாக இனங்காணப்படுகின்ற அதேவேளை, 13 ஆயிரம் புற்று நோயாளிகள் மரணமடைகின்றார்கள் என்று தேசிய புற்றுநோய் தடுப்புப் பிரிவின் இயக்குநரான டொக்டர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

புற்றுநோய் வராமல் ஆரம்பத்திலே தடுப்பு மருந்து மூலம் தடுக்கின்ற வகையிலே, குறிப்பாக பள்ளிக் கூடங்களில் 6ஆம் வகுப்பு மாணவியருக்கு தடுப்பூசி போடப்படுகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

புகையிலை மற்றும் பாக்குச் சார்ந்த பொருள்களை பயன்படுத்துவதன் காரணமாக அண்மைக் காலமாக சிறுவர்கள் மத்தியில் அதனால் வரக்கூடிய புற்றுநோய் அதிகரித்துக் காணப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் ஆண்டுதோறும் 1 லட்சத்து 38 ஆயிரம் மரணங்கள் பதிவாகின்றன. 75 சதவீதமான மரணங்கள் இருதநோய், புற்றுநோய் மற்றும் நீரிழிவு உள்ளிட்ட தொற்றாத நோய்களால் ஏற்படும் மரணங்கள் என அறிக்கையிடப்பட்டுள்ளன.

அந்த மரணங்களில் குறிப்பாக 40 சதவீத மரணங்கள் இருதநோய் காரணமாக நிகழ்கின்றன. புற்றுநோயால் 10 சதவீதத்தினரும் நீரிழிவு வியாதியால் 7 சதவீதத்தினரும் மரணம் அடைகின்றனர் என சமூக வைத்திய நிபுணரான டொக்டர் சுராஜ் பெரேரா கூறுகின்றார்.

ஆண்டுதோறும் அதிகரித்து வரும் புற்றுநோயாளிகளின் எண்ணிக்கையால் அத்தகைய நோயாளிகளின் இறப்பு எண்ணிக்கையிலும் அதிகரிப்பை காண முடிவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

1985 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 416 என்று அறிக்கையிடப்பட்ட புற்றுநோயாளிகளின் மரணங்கள் 2005ஆம் ஆண்டு 9 ஆயிரத்து 403 ஆக அதிகரித்ததோடு, 2009ஆம் ஆண்டு தரவுகளின்படி இது 11 ஆயிரத்து 286 ஆகக் கூடியிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## முன்னாள் டி.ஐ.ஜிக்கு பிணை அனுமதி

பெல்மதுளை, செப்.26

நேற்றுக் காலை விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் அதிபர் லலித் ஜயசிங்கவை பிணையில் செல்வதற்கு பெல்மதுளை நீதிவான் நீதிமன்றம் அனுமதி அளித்தது.

நேற்றுப் பிற்பகல் பெல்மதுளை நீதிவான் நீதிமன்றில் இவர் முன்னிலைப் படுத்தப்பட்ட போது, இவருக்குப் பிணை அனுமதி வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (உ)

(முன்னர் வந்த செய்தி முதலாம் பக்கத்தில்)

## கல்வியியல் கல்லூரிக்கு மாணவர் சேர்ப்பு

கடந்த 2015ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளில் மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கானவிண்ணப்பப் படிவங்கள் விரைவில் விநியோகிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் பிரசுரிக்கப்படும் எனவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைக்கு கூடுதலான மாணவர்கள் இம்முறை இணைத்துக் கொள்ளப்படுவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 3750 மாணவர்கள் தேசிய கல்வியியல் கல்லூரிகளில் தமது பயிற்சியை முடித்துக் கொண்டு ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காரைநகர், வேலணைப் பொதுக்கிணறுகளில் கடற்படை குடிதண்ணீர் அள்ளுவதைத் தடுங்கள்!

## அப்பிரதேசப் பொதுமக்கள் சார்பில் கோரிக்கை

காரைநகர், செப்.26

காரைநகர்மற்றும்வேலணை பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் கடற்படையினர் குடிதண்ணீர் எடுத்துச் செல்வதைத் தடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

இந்தப் பிரதேசங்களில் இருக்கின்ற பொதுக்கிணறுகளில் கடற்படையினர் நாளாந்தம் அதிகளவான குடிதண்ணீரை எடுத்துச் செல்கின்றனர்.

இதனால் அப்பகுதியின் நீர்வளம் பாதிக்கப்படுகிறது. பொதுமக்களுக்கான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதிலும் பாரிய சவால்கள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பில் கூட்டங்களில் கதைக்கப்படுகின்ற போதிலும் இன்று வரை அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

தனியார் மற்றும் பொதுக் கிணறுகளில் கடற்படையினர் நாளாந்தம் நீர் எடுப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. பாவனைக்கு உகந்த கிணறுகளைத் துப்பரவு செய்து மக்களுக்குத் தேவையான குடிதண்ணீரை வழங்குவதற்குப் பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தந்தப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும் இப்பிரச்சினை பேசப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் இன்றுவரை கடற்படையினர் பொதுமக்களின் கிணறுகளில் நாளாந்தம் பவுசர்களில் குடிதண்ணீரை எடுத்துச் செல்கின்றனர். எனவே, எமது நீர்வளத்தைப்பாதுகாக்கமக்கள்பிரதிநிதிகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் துணிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

# அரசின் பங்குதாரராயினும் அதற்கு அழுத்தம் தருவோம்

## அமைச்சர் மனோ கூறுகிறார்



கொழும்பு,செப்.26

“தமிழ் முற்போக்குக் கூட்டணி, அரசில் பங்குதாரராக இருந்தாலும், நியாயமான விடயங்களுக்காக அழுத்தங்களை வழங்கும் செயற்பாடுகளைக்கைவிடுவதில்லை என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது.

- இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகருமமொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

“தமிழ் முற்போக்கு கூட்டணி வடக்கு - கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவே உள்ளது. அவர்களின் அபிலாசைகளையும், உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டையும் கொண்டிருக்கின்றது.

“நாம் அரசில் பங்குதாரராக இருந்தாலும் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் துணை போகப்போவதில்லை. மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவின்போது 50 சதவீதம் தொகுதிவாரி பிரதிநிதித்துவத்தையும், 50 சதவீதம் விகிதாசார பிரதிநிதித்துவத்தையும் கொண்டமைந்த கலப்பு தேர்தல் முறைமையொன்று உள்ளீர்க்கப்படவேண்டும் என்பதில் இறுதிவரையில் உறுதியாக இருந்தோம்.

“வடக்கு - கிழக்குக்கு வெளியில் வாழும் முஸ்லிம்களைக் கருத்திற்கொண்டு செயற்பட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் இணைந்து அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகத்துக்கு இணக்கப்பாடொன்றை எட்டியிருந்தோம்.

“வடக்கு, கிழக்கினுள் வாழும் மக்களின் பிரச்சினைகளையும் நான் நன்கு உணர்ந்துள்ளேன். அவர்களுக்கு நியாயமான நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக பின்னிற்கப் போவதில்லை.

“அந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்புக்களின் முன்னகர்வுகளுக்கு என்னாலான உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு என்றுமே தயாராகவே இருக்கின்றோம் - என்றார். (உ)

# 17 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் வியாபாரிமூலைப் பகுதியில் கைது



பருத்தித்துறை - வியாபாரி மூலைப் பகுதியில் ஒருதொகைக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

27 வயதுடைய இளைஞர் ஒருவரே 17 கிலோ கஞ்சாவுடன் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.பிரியந்தவின் வழிகாட்டுதலில் பருத்தித்துறைப் பொலிஸார் இந்த இளைஞரைக் கைது செய்தனர் என்று கூறப்பட்டது. (உ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## இன்னொரு திலீபன் தேவை

காந்தி தேசத்துக்கே காந்தீயம் போதித்த ஒரு மறவனின் முப்பதாவது ஆண்டு நினைவு தினம் இன்று.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் சரித்திரம் படைத்து, உலகையே வியப்பிலும் அதேநேரத்தில் சோகத்திலும் ஆழ்த்திய ஓர் உத்தமனின் நினைவு நாளை இன்று நெஞ்சில் இருத்தி அஞ்சலிக்கின்றோம்.

தன் கொள்கைக்காக ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல், பல்லாயிரக் கணக்கில் தம்மினத்தவர் சூழ்ந்திருந்து பார்த்து வேதனையில் வெம்பிக் கதறியழ, அணு அணுவாய் உடல் தளர்ந்து, சாவை அரவணைத்து, இந்த மண்ணுக்காய் உயிர் துறந்த ஒரு பெருமகனின் நினைவு தினம் இது.

பன்னிரண்டு நாள்களாக எந்த ஆகாரமுமே உள்ளெடுக்காமல் - நீர் கூட அருந்தாமல் - சுமர் 265 மணித்தியாலங்கள் - வேள்வித் தீயில் வெதும்பி, வேற்றுலகு எய்தியவன் நம் திலீபன்.

உலகில் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டங்களுக்கு சிகரம் வைத்தது திலீபனின் தளராத உறுதிதான்.

மறவழியில் போராடிய மாமனிதன் அறவழியிலும் - அஹிம்சை மார்க்கத்திலும் - காந்தீய நெறியிலும் - உச்சக்கட்ட ஈகத்தை செய்யலாம் என்பதை உலகுக்கு நிரூபித்தவன்.

உயிர் துறந்த பின்னரும் கூட தன்னுடல் தன் மக்களுக்காகப் பயன்பட வேண்டும் என எண்ணிய பொதுநலவாதி - பெருந்தகையாளன் - அவன்.

தன் உடல் இந்த மண்ணின் மைந்தர்களின் மருத்துவப் படிப்புக்கு உதவட்டும் என்ற தாராள சிந்தனையுடன் அதனை நேரத்துடனேயே தியாகம் செய்தவன். அதனால் அவனது இறுதிக் கிரியைகள் ஈற்றில் தீ மூட்டி சாம்பராகவோ அல்லது பூமித் தாயிடம் விதைப்பதாகவோ முடியவில்லை.

அவனது விருப்பப்படியே, அவனது புகழுடல், ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வாழ்வில் சிறப்பு மிக்க சுதுமலை அம்மன் கோவிலின் முன்றிலில் வைத்து - அங்கு திரண்டிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் வைத்து - யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடப் பீடாதிபதியிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டத்தில் குதித்த திலீபன், காந்தி தேசத்தின் காந்தீயத்துக்குப் பின்னால் புதைந்து கிடந்த அரசாட்சியின் எதேச்சதிகாரத்தைச் சர்வதேசத்துக்கும் அம்பலப்படுத்தியவன்.

தமிழர்களுடைய விடுதலைப் போராட்ட வரலாற்றில் திலீபனின் தியாகம் ஒரு பெரும் மகத்தான வரலாற்றுத் திருப்பம், தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையே தட்டி எழுப்பி, விழிப்புற வைத்த நிகழ்வு; உலகத்தை உசுப்பி, அதன் மனச்சாட்சியைத் தீண்டி, உண்மைய அம்பலப்படுத்தி, புதுடில்லி ஆட்சியாளர்களின் மெத்தனப் போக்கை பகிரங்கப்படுத்தி, அவர்களின் முகத்தில் கரியைப் பூசிய சம்பவம்.

ஈகத்தின் - தியாகத்தின் - உச்சமாகக் கட்டவிழ்ந்த ஒரு வரலாற்றுத் திருப்ப நிகழ்வாகக் கொள்ளத்தக்கது திலீபனின் கிஞ்சித்தும் தளராத உறுதியான போராட்டம்.

ஆயுதப் போராட்டத்தில் தோற்று, ஆற்றாமையில் துவண்டு, தளர்ந்து போயிருக்கும் இலங்கைத் தமிழினத்துக்கு இன்று தேவைப்படுவது திலீபனைப் போன்ற உண்மையான அஹிம்சை வீரர்கள்தாம்.

தந்தை செல்வாவின் அறநெறியையும், காந்தீய மார்க்கத்தையும், அஹிம்சைப் பாதையையும் அதிகாரப் பதவிகளை எட்டுவதற்கான தடங்களாகப் பயன்படுத்தும் நம் தலைவர்கள் மத்தியில் இன்று உண்மையான - உறுதியாக அஹிம்சை மார்க்கத்தில் போராடக் கூடிய - தலைவர்கள்தாம் அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுகின்றார்கள்.

காலையில் எழுந்து வீட்டில் வயிறு முட்டப் பிடித்து விட்டு, நான்கு மணிநேரம் கொட்டகைகளுக்குக் கீழ் - கமெராக்கள், செய்தியாளர்கள் புடைசூழ - உண்ணதவிரதப் போராட்டம் நடத்தும் நமது தலைவர்கள் மத்தியில் உண்மையாக - உறுதியாக - திடமாக - நெஞ்சுரத்துடன் - சுயநலமே பாராது - அஹிம்சைப் போராட்டம் நடத்தக் கூடிய மனத்தைரியமும், உளத்தெம்பும், கொள்கைப் பற்றும், பொதுநல எண்ணமும் கொண்ட திலீபன்களே தேவைப்படுகின்றார்கள்.

ஜனத்தொகையின் எண்ணிக்கையில் அதிகம் என்ற ஜனநாயகத்தின் பெரும்பான்மைச் சாதகத்தைத் தனக்கு வாசியாகப் பயன்படுத்திக் கொண்டு மேலாதிக்கம் செய்யும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தைத் தமது மறவழிப் போராட்டத்தால் அசைத்து, நிலைகுலைய வைத்த நமது போராளிகளால் அதை நிலைபேறாக வெற்றியாக்க முடியவில்லை. பெரும்பான்மை எண்ணிக்கை என்ற சாதகத்தன்மையே சிங்களத்தின் மறவழி வெற்றிக்கும் காரணமாயிற்று.

இப்போது நமக்கு எஞ்சியிருக்கும் ஒரே பாதை - சரித்திரம் விட்டிருக்கும் ஒரே மார்க்கம் - அறவழிப் போராட்டம்தான்.

ஆனால், அந்த அறவழிப் போராட்டத்தின் மென்மைப் போக்கைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அதில் குளிர்காயும் சுயநலக் கும்பல்களின் கையில் அந்தப் போராட்டத் தலைமை வீழ்ந்து கிடக்கின்றது என்பதே உண்மை.

அந்தத் தரப்புகளிடமிருந்து நம்மை மீட்டு, அறவழியில் உறுதியாக நின்று போராடி, தென்னிலங்கையின் ஆழ்மனத்தையே ஓர் அசைப்பு அசைத்து, வழிப்படுத்தி, நம் பக்கம் திருப்புவதற்கு ஓர் அறவழித் திலீபன் இன்று எமக்குத் தேவைப்படுகின்றான்.

கொள்கைப் பற்றும், விலை போகாப் பேராண்மையும், நெஞ்சுறுதியும், இனத்துக்காகத் தன்னுயிரை ஈந்தளிக்கும் தாராளமும் மிக்க ஒரு திலீபனுக்காக நம் தமிழினம் இன்று காத்துக் கிடக்கின்றது என்பதே உண்மை.

# மஹிந்தர் என்கின்ற பூச்சாண்டியைக் காட்டி தமிழரை வாய்மூடச் சொல்கிறது மைத்திரி அரசு!

- பொ.ஐங்கரநேசன் -

புதிய அரசமைப்புக்கான இடைக்கால வரைவு, தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் ஆகிய அரசியல் வேணவாக்களை மிக நாசூக்காக நிராகரித்துள்ளது. மாறாக, நாட்டில் ஏற்கனவே கோலோச்சுகின்ற பௌத்த, சிங்கள மேலாதிக்கத்தை உறுதி செய்வதாகவே அது அமைந்திருக்கிறது. தமிழ் மக்களின் கோரிக்கைகளைச் செவிமடுத்தால் சிங்கள இனவாதத்தைத் தூண்டி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் பலம்பெற்று விடுவார் என்று அரசு தரப்புச் சொல்கிறது. மஹிந்த என்ற பூச்சாண்டியைக் காட்டிக் காட்டியே மைத்திரி அரசு தமிழர்களை வாய்மூடச் சொல்கிறது என்று வடக்கு மாகாணசபையின் முன்னாள் விவசாய அமைச்சரும், மாகாண சபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.



மல்லாகம் கல்லாரையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்



கிழமை மாதர் அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துச் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பாகக் கலந்துரையாடிய போதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

தமிழ்மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக அரசால் முன்வைக்கப்பட்டிருக்கும் புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் பௌத்த மதத்துக்கே முதன்மை இடம் வழங்கப்பட்டுள்ளது. பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவதை எமது தமிழ்த் தலைவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். இலங்கையின் அரசியல் தலைவிதியை வரலாற்றுக் காலம் தொட்டு பௌத்த மதபீடங்களே தீர்மானித்து வருகின்றன. சிங்களப் பேரினவாதக் கருத்துகளின் ஊற்றுக் கண்களாகவும் இவையே விளங்கி வந்திருக்கின்றன. இந்தநிலையில், பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவதற்குத் தமிழ்த் தலைமைகள் ஏற்றுக் கொண்டிருக்கின்றமை தமிழர்களின் அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது.

தமிழ்க் கட்சிகளின் தலைமைகளைத் தனக்குச் சாதகமாக வளைத்துப் போடுவதில் நல்லாட்சி அரசு வெற்றி பெற்றிருக்கிறது. அரசாங்கம் சொல்வதைப் போன்றே, இவர்களும் நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறு கூறி வருகிறார்கள். வடக்கு மாகாண சபையில் இருந்தும் ஏகோபித்த விதமாக ஒரு தீர்மானம் வந்து விடக்கூடாது என்பதற்காக மாகாணசபையைப் பல அணிகளாக உடைப்பதிலும் ரணில் அரசு வெற்றி பெற்றிருக்கிறது. இந்நிலையில் பௌத்த சிங்களபேரினவாதத்தை எதிர்கொள்வதில் தமிழர் தரப்பு மிகவும் பலவீனமாகவே உள்ளது.

ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டபோது, எம்மீதான சர்வதேசக் கவனம் மிக அதிகமாக இருந்தது. விட்ட இடத்தில் இருந்து தொடரும் அஞ்சலோட்டம்போல, எமது போராட்டத்தை ஜனநாயக வழிமுறைகளிலான போராட்டமாகத் தீவிரமாகத் தொடர்ந்திருந்தால் சர்வதேச சூழலை எமக்கானதாக மாற்றியிருக்க முடியும். ஆனால், நாங் கள் ஆட்சி மாற்றம்தான் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைத்தரும் என்று சொல்லி எமது கட்சித் தலைவர்களை நம்பி ஆட்சி மாற்றத்துக்கு வாக்களித்தோம். அதையே ஒரு பெரும் புரட்சியாக நம்பிய நாம் இன்று கடைசியில் எல்லோராலும் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

(உ)

# பெங்களூரில் மருந்து உற்பத்தியாளரின் கண்காட்சியில் பங்குபெற விருப்பமா?

## யாழ். வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்

யாழ்ப்பாணம், செப். 26

பெங்களூர் நகரில் நடைபெறவிருக்கும் இந்தியாவின் மருந்து உற்பத்தியாளர் மற்றும் மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்வோர் பங்குபற்றும் மாபெரும் கண்காட்சி ஒன்று எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைபெறவிருப்பதாகவும் இதில் பங்குபற்றுவதன் மூலம் மருந்துகள் விற்பதிலும் மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்வதிலும் ஈடுபட்டுள்ளவர்கள் அதிக பயனைப் பெறமுடியும் எனவும் இந்தியத் துணைத்தூதர் யாழ். வணிகர் கழகத்துக்கு அறியத் தந்துள்ளார்.

மேற்படித் துறைகளில் வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளவர்கள் இந்தக் கண்காட்சியில் பங்குபற்றும் பட்சத்தில் அவர்களுக்கு உணவு வசதிகளுடன் கூடிய தங்குமிட வசதியும் விமான நிலையத்திலிருந்து போக்குவரத்து வசதியும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், விமானப் பயணக் கட்டணம் வழங்கப்படமாட்டாது. இந்த வாய்ப்பைப் பெற விரும்பும் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் போன்றவற்றின் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யாழ். வணிகர் கழகத்திலிருந்து பெறக் கூடிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கமுடியும் என்றும் யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (இ)

### நாளை

27.09.2017
புதன்கிழமை
நட்சத்திரம் : கேட்டை மு.ப. 10.29 வரை
திதி : ஸப்தமி மா. 6.35 வரை
சுபநேரம் : 4.32 – 6.02 வரை
இராகுகாலம் : 12.02 – 1.32 வரை

# ஒற்றையாட்சி முறைக்கு இணங்க சிறுபான்மைக் கட்சிகள் தயாராம்!



## காலியில் வைத்து பிரதமர் அறிவிப்பு

கொழும்பு,செப்.26

கூடுதல் அதிகாரங்களை வழங்குவதற்குப் பிரதான கட்சிகள் இணங்கினால், நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையையும் பௌத்தத்துக்கான முன்னுரிமையையும் தொடர்ந்து தக்கவைத்திருப்பதைப் பரிசீலிக்க சிறுபான்மை இனக் கட்சிகள் தயாராக இருக்கின்றன என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

கொழும்பு ஊடகங்களை மேகோள்காட்டி செய்தி ஏஜென்ஸிகள் இந்தத் தகவலை வெளியிட்டன.

காலி, வெகுணகொடவில் பொலிஸாருக்கான புதிய விடுதியைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இடைக்கால அறிக்கையின் முதலாவது பந்தியில் கூறப்பட்டுள்ளமை போல, செனட் சபையை உருவாக்கி, எல்லா சமூகங்களினதும் மனித உரிமைகளைப் பாதுகாத்து, நீதித்துறை சுதந்திரத்தை உறுதிப்படுத்தி, போரினால் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தி, அதிகபட்ச அதிகாரங்களைப் பகிர்வதற்கு, ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணங்கினால், நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையையும் பௌத்தத்துக்கான முன்னுரிமையையும் தொடர்ந்து தக்க வைத்திருப்பதைப் பரிசீலிக்க சிறுபான்மைக் கட்சிகள் தயாராக இருக்கின்றன.

''இதுபோன்ற இணக்கப்பாட்டுக்கு சிறுபான்மைக் கட்சிகள் முன்னொருபோதும் வந்ததில்லை.

''தேசியப் பிரச்சினை தொடர்பாக இரு பிரதான கட்சிகளும் முட்டிக்கொள்கின்ற நிலையில், தாம் ஒரு தலைப்பட்ச நிலைப்பாட்டை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று சிறுபான்மைக் கட்சிகள் கருதுகின்றன.

''எனினும், இடைக்கால அறிக்கையைப் பிரதான கட்சிகள் இரண்டும் ஏற்றுக் கொண்டால், நாட்டின் ஒற்றையாட்சிப் பண்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம் என்றும், பௌத்தத்துக்கான முன்னுரிமைக்கும் அவை வாக்குறுதி அளித்துள்ளன.

''தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்குக் கூட்டு அரசாங்கம் தேவையானது. ஆட்சி மாற்றமும், கூட்டு அரசாங்கம் பதவிக்கு வந்ததுமே, அரமைப்பு மாற்ற முயற்சிகளுக்குச் சாதகமாக அமைந்தன.

''இடைக்கால அறிக்கையின் மூலம், இறுதியான தீர்வு ஒன்றைக் காண முடியும். இந்த அறிக்கை தொடர்பாக ஒக்ரோபர் இறுதியில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவுள்ளது'' என்றும் அவர் கூறியுள்ளார். (உ)

## வாழ்வகத்தில் வாணி விழா

சுன்னாகம்,செப்.26

சுன்னாகம், மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப்புலனற்றோர் வலுவிழந்தோர் இல்லத்தின் வாணி விழா நிகழ்வுகள் நாளை புதன்கிழமை பி.ப 2 மணிக்கு இடம்பெற உள்ளன.

வாழ்வக மாணவன் செல்வன் ஸ்ரீதரன் யோகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், சிறப்புச் சொற்பொழிவை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் சிவநெறிப்பிரியன் மு.நித்தியானந்தன் 'கலைகள் அருள்வாய் கலைவாணி' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

சிறப்பு நிகழ்வுகளாக பூசை வழிபாடுகள், வித்தியாரம்பம், வரவேற்பு நடனம், ஆசியுரை, பேச்சு, குழுநடனம், கவிதை, குழுப்பாடல், சிற்தனைக் களம் என்பன இடம்பெற்று நன்றியுரை, வாழ்வகக் கீதம் ஆகியவற்றுடன் நிகழ்வுகள் நிறைவுபெறும். (இ)

## இலங்கையை மத சார்பற்ற நாடாக மாற்றுவதற்கே புதிய அரசமைப்பாம்!

### தென்னிலங்கையரை உசுப்பேத்துகிறார் மஹிந்தர்

கொழும்பு,செப்.26

புதிய அரசமைப்பின் ஊடாக இலங்கையை மத சார்பற்ற நாடாக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றஞ்சுமத்தியுள்ளார்.

வெல்லவாய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக் கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் -



இலங்கையின் அரச ஆதரவு கொண்ட மதமாக பௌத்த சமயம் நீண்டநாள்களாகவே உள்ளது.

புதிய அரசமைப்பின் ஊடாக இலங்கையை மத சார்பற்ற நாடாக மாற்றுவதற்கு முயற்சிக்கின்றனர்.

இதற்காகவே புதிய அரசமைப்பு உருவாக்கப்படுகின்றது.

பௌத்த மகா சங்கத்தினர் அரசின் சிலரால் நிந்திக்கப்படுகின்றனர். அரசின் உயர் தலைவர்களின் அனுமதி இல்லாமல் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ள முடியாது. வரலாற்றில் தேர்கள் தரக் குறைவாக நடத்தப்படுகின்றார்கள். இப்படியான நிகழ்வுகள் தற்போதுதான் இடம்பெற்று வருகின்றன - என்றார் அவர். (உ)

# முன்னாள் போராளிகளை அரசியலுக்கு மக்களே அழைக்கின்ற காலம் வரும்!

திருகோணமலை,செப்.26

''காலம் பதில் சொல்லும் போது மக்களே எங்களை அரசியல் செய்யச் சொல்வார்கள். அதுவரை அரசியலுக்கு வரும் எண்ணம் எங்களுக்கு இல்லை'' - என புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூக மயப்படுத்தப்பட்ட நபர்களின் ஒன்றியத் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்தார்.

மூதூர் கிழக்கு கட்டைபறிச்சானில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

முன்னர் நாம் அரசியல் செய்வதற்குத் தீர்மானித்து அரசியல் கட்சியாகப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பத்தைத் தேர்தல்கள் ஆணையாளரிடம் சமர்ப்பித்திருந்தோம்.



## புனர்வாழ்வளிக்கப்பட்டோர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

இப்போது அரசியலை விட எமது உறுப்பினர்களின் வாழ்வாதாரம் முக்கியமாகப்படுகிறது. மக்கள் விரும்பும் போது நாம் அரசியலுக்கு வருவோம். அதனைக் காலம்தான் சொல்லும்.

தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு அரசால் பணம் ஒதுக்கப்பட்ட போதும், புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளுக்கு அவர்களின் முன்னேற்றம் கருதி எவ்வித ஒதுக்கீடுகளையும் அரசியல் செய்வோர் செய்து தரவில்லை.

புலம் பெயர்ந்த நபர்கள் வழங்கிய 50 ஆயிரம் ரூபாவை நாம் 22 புனர்வாழ்வு பெற்ற போராளிகளுக்கு வழங்கி உள்ளோம்.

கிழக்கு மாகாணக் கல்வி, புனர்வாழ்வு அமைச்சர் 30 பேருக்கு உதவி செய்வார் எனத் தெரிவித்தார். இருந்த போதிலும் எவ்வித உதவிகளும் எமக்குக் கிடைக்கவில்லை. அவரோடு இணைந்து பணியாற்றும் நபர்கள் சிபார்சு செய்பவர்களுக்கு உதவிக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எமக்கு விரோதமானவர்கள் அல்லர். அவர்களின் செயற்பாடுகள் எமக்கு திருப்தியளிக்கவில்லை. அவ்வளவே. தெரிந்தவர்களுக்கு மாத்திரம் உதவி செய்யும் முறைமை மாற்றப்பட வேண்டும்.

20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பான விவகாரத்தின் போது, வடக்கு மாகாண சபை எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார்கள். ஆனால், கிழக்கு மாகாணசபையில் அவர்கள் ஆதரவைத் தெரிவித்து இருந்தார்கள். இரண்டிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரே ஆட்சி செய்கிறார்கள்.

இது, தமிழ் அரசியல் தலைவர்கள் மத்தியில் ஒற்றுமை இல்லை என்பதையும், ஒரே கட்சிக்குள் வேறுபாடுகள் உள்ளன என்பதையும் காட்டுகிறது என அவர் மேலும் குறிப்பிட்டார். (உ)

# இடைக்கால அறிக்கை
# தமிழ் மக்களுக்குப் பெரும் நன்மை முஸ்லிம், சிங்களவருக்கும் பாதிப்பு
## இப்படிக் கருத்து வெளியிடுகிறது உலமாக் கட்சி



அரசமைப்பு வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை என்பது தமிழ் மக்களுக்கு ஓரளவு வெற்றியாகவும் முஸ்லிம்களுக்கும், சிங்களவருக்கும் எந்த நன்மையையும் அளிக்காமல் பாரிய பாதகங்களை ஏற்படுத்துவதாகவுமே அமைந்துள்ளது என்பதே முஸ்லிம் உலமா கட்சியின் நிலைப்பாடாகும் என அக்கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

கல்முனையில் உள்ள கட்சி காரியாலயத்தில் நடைபெற்ற கட்சி ஆதரவாளர் சந்திப்பின் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இடைக்கால அறிக்கையில் வடக்கும் கிழக்கும் ஒரே அலகாகக் கருதப்படும் என்று எழுதப்பட்டுள்ளதானது கிழக்கு முஸ்லிம்களைத் தமிழர் ஆதிக்கத்துக்கு அடிமைப்படுத்தும் கருத்தாகும். இதனை எந்த வகையிலும் உலமா கட்சி ஏற்றுக்கொள்ளாது.

அதுவும் சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் அதிகாரப் பரவலாக்கல் செய்ய வேண்டும் என்பதில் ஒத்த கருத்துள்ள நிலையில் மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரமும் வழங்கப்பட்டு வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டால் அது நிச்சயம் முஸ்லிம்களுக்கு பாரிய பாதகங்களை ஏற்படுத்தும் என்பதுடன் எதிர்காலத்தில் தமிழ், முஸ்லிம் மோதல்களையும் ஏற்படுத்தும்.

அப்போது 85களில் ஐக்கிய தேசியக்கட்சி செய்தது போன்று முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் ஆயுதத்தை கொடுத்து இரு இனங்களையும் மோத விட்டது போன்ற மோதலை சிங்கள பேரினவாத அரசுகள் ஏற்படுத்தலாம்.

கிழக்கில் மட்டுமல்லாது கிழக்குக்கு வெளியே - குறிப்பாக வடக்கு, மேல் மாகாணம் போன்ற மாகாணங்களில் - மிகச்சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களுக்கும் இது மிகபெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

இதன் காரணமாகவே 2010 முதல் அரசமைப்புச் சபைக்கு உலமா கட்சியால் வழங்கப்பட்டு வரும் ஆலோசனைகளில் ஒன்றாக மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரம் வழங்குவதாயின் கிழக்குக்கு வெளியில் வாழும் முஸ்லிம்களின் பெரும்பான்மை பிரதேசங்களை இணைத்து தனி நிர்வாக சபைகளை ஏற்படுத்த வேண்டும் என கூறி வருகிறோம். அவ்வாறு முடியாது என்றால் தற்போதிருக்கும் இனவாத சூழலில் மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

இலங்கை வரலாற்றை பார்க்கும் போது பொலிஸார் பெரும்பாலும் இனவாதமாகவே செயற்பட்டு வந்துள்ளமையைக் காண்கிறோம்.

அதே போல் வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டு தமிழ் பொலிஸ் உருவாக்கப்பட்ட போது முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்களை நாம் எளிதில் மறந்து விட முடியாது.

வரலாற்றின் கசப்பான நிகழ்வுகள் பாடமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு எடுக்கப்படும் தீர்வுகளே நிரந்தர அமைதியைத் தரும்.

அத்துடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை இருக்க வேண்டும் என்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைப்பாட்டை நாம் வரவேற்கிறோம். அதுவே எமதும் நிலைப்பாடாகும். - என உலமா கட்சித் தலைவர் முபாறக் மௌலவி தெரிவித்தார்.

# இனந்தெரியாத இளைஞர் குழுக்கள் வவுனியா நகரத்தில் அட்டகாசம்

வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் அடையாளம் தெரியாத இளைஞர் குழுக்கள் நேற்றுமுன்தினம் மாலை தொடக்கம் நள்ளிரவு வரை அட்டகாசத்தில் ஈடுபட்டன.

குருமன்காடு, வைரவப்புளியங்குளம், புகையிரத வீதி, பூங்கா வீதி, நகரசபை வீதி, குட்செட் வீதி, தோணிக்கல் போன்ற பகுதிகளிலேயே அடையாளம் தெரியாத இளைஞர் குழுக்கள் அட்டகாசத்தில் ஈடுபட்டன எனப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

வீதியில் சென்றுகொண்டிருந்த பொதுமக்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு அவர்களிமிருந்து நகைகள், பணம் என்பவற்றை அபகரிக்க இக்குழுக்கள் முயன்றுள்ளன எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதனால் காயமடைந்த இருவர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் மூன்றுக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் இது வரையில் எவரும் கைது செய்யப்படவில்லை. (உ-100)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் உணவு தவிர்ப்புப் போரில்






வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் 14 பேர் நேற்று உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியாவில் கடந்த 214 நாள்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது கோரிக்கைகளுக்கு இதுவரை ஆக்கபூர்வமான பதிலேதும் அரசினாலும், தமிழ் தலைமைகளாலும் வழங்கப்படாத நிலையில் சர்வதேசம் தமக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும் எனக் கோரி இரு நாள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா கந்தசுவாமி கோவிலில் தேங்காய் உடைத்து வழிபாடுகளில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அங்கிருந்து தாம் போராட்டத்தை முன்னெடுத்து வரும் ஏ9 வீதியின் வீதிஅபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக உள்ள இடத்துக்கு வந்து தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இப்போராட்டம் நேற்றும் இன்றும் தொடர்ந்து நடைபெறும். பின்னர் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பில் அவர்கள் ஈடுபடுவர்.

எனினும், குறித்த காலப்பகுதிக்குள் தமக்கான தீர்வு வழங்கப்படாவிட்டால் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்திலும் ஈடுபடுவோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (உ-100)

# மத சார்பற்ற இலங்கை தேசம்; டக்ளஸ் தேவானந்தா வற்புறுத்து



யாழ்ப்பாணம், செப்.26

இலங்கை ஒரு மதசார்பற்ற நாடாக இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அதனூடாகவே இனங்களுக்கிடையே நிலையான ஒரு புரிந்துணர்வை உருவாக்க முடியும் என்று நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கட்சியின் மாவட்ட நிர்வாகத்தினருடனான சந்திப்பின்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில் -

நாடாளுமன்றத்தில் தற்போது புதிய அரசமைப்பு வரைவு ஒன்று முன் வைக்கப்பட்டுள்ளது. இதில் ஏனைய கட்சிகளுடன் நாமும் பல முன்மொழிவுகளை தெரிவித்துள்ளோம்.

எமது ஈழ மக்கள் ஜனநாயக கட்சியே மதச்சார்பற்ற நாடாக இலங்கை இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளது.

தமிழ் மக்கள் இலங்கையர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக தமிழர் என்ற அடையாளத்தையோ அன்றி தமிழராக இருக்க வேண்டும் என்பதற்காக இலங்கையர் என்ற அடையாளத்தையோ கைவிடத்தயார் இல்லை. அவர்கள் இலங்கையர்களாகவும் தமிழராகவும் இருக்கவே விரும்புகின்றார்கள். - என்று தெரிவித்தார்

அத்துடன் கடந்த கால தமிழ், சிங்கள அரசியல் வாதிகள் தத்தமது சுயலாப அரசியலுக்காக இந்த விடயத்தை ஆரோக்கியமாக எடுத்துக் கொள்ளாமைதான் எமது நாடு இருட்டில் மூழ்கடிக்கப்பட்டது என்றும் சுட்டிக்காட்டியமையுடன் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி, என்ற எமது கொள்கை நிலைப்பாட்டில் நாம் எப்போதும் உறுதியாகவே இருக்கின்றோம். - என்றும் அவர் தெரிவித்தார்.

# சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு இனி மனநல சான்றிதழும் அவசியம்

சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிப்பவர்கள் இனிமேல் மனநலம் தொடர்பான மருத்துவச் சான்றிதழையும் கட்டாயம் வழங்க வேண்டும் என வீதி பாதுகாப்புக்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.

தற்போது சாரதி விண்ணப்பப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு போக்குவரத்து மருத்துவ நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உடல் ஆரோக்கிய சம்பந்தமான மருத்துவச் சான்றிதழ் மட்டும் போதுமானதாக உள்ளது.

இந்நிலையில் வாகன விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன என்பதால் புதிய தீர்மானத்தை எடுத்துள்ளதாக வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் டாக்டர் சிசிர கோதாகொட தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சரவை பத்திரமொன்றைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் விரைவில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனைச் சமர்ப்பிப்பார் என்றும் அவர் தெரிவித்தார்.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் மோட்டார் வாகன திருத்த சட்டமூலம் அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வோர் மனநலம் தொடர்பான மருத்துவ சான்றிதழ் வழங்குவது கட்டாயம் எனவும் மேற்படி மனநல மருத்துவ சான்றிதழ் வழங்காத சாரதிகளுக்கு இனிமேல் சாரதி விண்ணப்பப்பத்திரம் வழங்கப்படமாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir



# புதிய அரசமைப்புக்கு மக்களின் அங்கீகாரத்தை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் பெற்றாகவேண்டும்

## அஸ்கிரிய பீடம் வலியுறுத்து

கொழும்பு,செப்.26

இலங்கை அரசாங்கத்தால் முன்மொழியப்படும் புதிய அரசமைப்பு மீது பொதுவாக் கெடுப்பு (சர்வஜன வாக்கெ டுப்பு) நடத்தப்படுவது அவ சியம் என்று அஸ்கிரிய பீடம் வலியுறுத்தியுள்ளது.

புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக் கால அறிக்கையை நாடாளு மன்ற அவை முதல்வர் லக்ஷ் மன் கிரியெல்ல, கடந்த சனிக் கிழமை கண்டியில் பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களி டம் கையளித்தார்.



அதன்போதே,அஸ்கிரியபீடத் தின் அனுநாயக்க தேரரான வண. ஆனமடுவ சிறி மம்ம தாசி தேரர் புதிய அரசமைப்பு யோசனை மீது பொதுவாக்கெ டுப்பு நடத்தப்பட வேண் டும் என்று வலியுறுத்தி னார்.

அரசமைப்பு வரைவு நாடாளு மன்றத்தால் அங்கீகரிக்கப்பட் டால் மட்டும் போதாது. நேரடி யாக மக்களின் அங்கீகாரத்தை யும் பெற வேண்டும். - என் றும் அவர் கூறினார்.

அதற்கு, நிச்சயம் இந்த அரசமைப்புவரைவு தொடர்பா கப் பொதுவாக்கெடுப்பு நடத் தப்படும் என்று லக்ஷ்மன் கிரியெல்ல உறுதியளித்தார்.

அதேவேளை, இடைக்கால அறிக்கையைப் பெற்றுக் கொண்ட மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் வண. திப்பொட் டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கல தேரர், எந்தவோர்அரச மைப்பின் கீழும், நிறை வேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையைத் தாம் விரும்பவில்லை என்று கூறி உள்ளார்.

எந்தவோர் அரசினதும் பதவிக்காலம் 5 ஆண்டு களாகவே இருக்கவேண்டும். அந்த ஐந்து ஆண்டுகளுக்குள் அரசு, மக்களுக்கும் நாட்டுக் கும் தேவையான நல்ல விட யங்களைச்செய்ய வேண்டும். - என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

(உ)

# குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்ற படையினர் மீது சட்டம் பாயும்!

## பாதுகாப்புச் செயலர் திட்டவட்டம்



கொழும்பு,செப்.26

குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட அரச படையினர் சட்ட நடவடிக்கைகளை எதிர் கொண்டேயாக வேண் டும் என்று பாதுகாப்புச் செயலர் கபில வைத்தி யரத்ன தெரிவித்துள் ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள செவ்வி யில், 'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கி ரமதுங்க கொலை மற் றும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போகச் செய் யப்பட்டமை உள்ளிட்ட குற்றங்களுக்குப்பொறுப் பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார் கள் என்று கூறியுள்ளார்.

அதேவேளை, ஆயுதப் படையினர்துன்புறுத்தப் படுவதில் இருந்து பாது காக்கப்படுவர் என்று ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன கூறியி ருந்தமை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக் குப் பதிலளித்த பாது காப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, எந்த வொரு சூழ்நிலையிலும் அரச படையினர் தண் டிக்கப்படமாட்டார்கள் என்று ஜனாதிபதி கூற வில்லை என்பதைச் சுட் டிக்காட்டியுள்ளார்.

குற்றங்களில் ஈடு பட்டவர்கள், உயர்நிலை அல்லது கீழ்நிலை அதி காரிகளாக இருந்தாலும் சரி, சட்டத்தை எதிர் கொள்ளவேண்டும் என்றே அவர் கூறியிருக் கிறார். லஸந்த விக்கிரம துங்க, பிரகீத் எக்னெலி கொட வழக்குகள், சரி யான முறையில், சட்ட ரீதியாக இடம்பெறுகின் றன.

தமக்கு வழங்கப் பட்ட ஆணையை விட்டு விலகிச் செயற்பட்டிருக் கின்றமை நிரூபிக்கப் பட்டால், அத்தகைய படையினருக்கு சட்ட விலக்கு அளிக்கப்பட மாட்டாது.

போர்க்குற்றச்சாட்டு கள் தொடர்பாகப் பாது காப்புஅமைச்சுகொள்கை ஒன்றை வகுக்கவுள்ளது. அது வேறுபட்ட செயல் முறையாக இருக்கும் - என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

(உ)

# பொலிஸ் பணியில் சேர்வதற்கு தமிழருக்கு நாட்டமே இல்லை

## கவலை தெரிவிக்கிறார் பிரதமர் ரணில்

கொழும்பு, செப்.26

இலங்கைப் பொலிஸ் திணைக் களத்தில் சேர்ந்துகொள்வதில் தமிழர்கள்நாட்டம்காட்டுகிறார்கள் இல்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கவலை தெரிவித் துள்ளார்.

''பொலிஸில் உள்ள 7 ஆயிரம் வெற்றிடங்களில் 10 வீதத்துக்குத் தமிழர்களைச் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஆனால், இதற்கான நேர்முகத் தேர்வுக்கு 180 பேரே வந்திருந்த னர்.

''பொலிஸ் வெற்றிடங்கள் அனைத்தும் வடக்கில் இருந்தே நிரப்பப்படுகின்றன எனக் கூறப் படும்குற்றச்சாட்டுகளின் பின்னணி




யில் இருந்து இதனை ஆராய வேண்டும்.

இது தொடர்பாக வட மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ வரன், சட்டம் ஒழுங்கு அமைச் சர் சாகல ரத்நாயக்க, காவல்துறை மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோருடன் கலந்துரையாடி யிருக்கிறேன் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

(உ)

# எல்லை மீள் நிர்ணயம் நடந்த பின்பே இனி மாகாண சபைத் தேர்தல்கள்!

## தெரிவிக்கிறார் தேர்தல் ஆணையாளர்



கொழும்பு,செப்.26

மாகாணசபைகள் தேர்தல் திருத் தச் சட்டத்தை அரசு நாடாளு மன்றத்தில் நிறைவேற்றியிருப்ப தால், அதன்படி, எல்லை மீள் நிர்ணயப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்த பின்னரே, கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தமுடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முதலில் எல்லை மீள்நிர்ணயத் துக்கான ஆணைக்குழு நியமிக் கப்பட்டு, அது எல்லைகளை வரை யறுக்கும் செயற்பாடுகளை நிறைவு செய்த பின்னர், மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எல்லைகளை வரையறுக்கும் செயற்பாடுகள் மூன்று மாதங்களுக் குள் நிறைவடையும் என்று நான் நம்புகிறேன். தேர்தலை ஜனவரியில் நடத்த முடியும்.

"2018ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் தேர் தல் நடத்தப்படும். இந்தப் பட்டியல், வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்படும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ)

# இந்தியப் பிரஜை கட்டுநாயக்காவில் வைத்துக் கைது!

கொழும்பு, செப்.26

சட்டவிரோதமாகப் பெருந்தொகை வெளி நாட்டுப்பணத்துடன்இந் தியா நோக்கிச்செல்ல முற்பட்ட இந்தியப் பிர ஜையொருவர் கட்டு நாயக்க விமான நிலை யத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான வெளி நாட்டுப் பணத்தொகை சந்தேக நபரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இதில் 62 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் கள்இருந்துள்ளன.கட்டு நாயக்க பாதுகாப்பு அதி காரிகளால் கைது செய் யப்பட்டுள்ள சந்தேக நபர் சுங்க அதிகாரிகளி டம் ஒப்படைக்கப்பட் டுள்ளார்.

(உ)

## லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கு:

# எதிரித் தரப்பு சட்டத்தரணியின் குறுக்கு விசாரணையால் சாட்சியான அரச சட்ட வைத்தியருக்கு வந்தது நெஞ்சுவலி

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை வழக்கில் எதிர்த் தரப்பு சட்டத்தரணியால் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட அரச சட்ட வைத்திய அதிகாரி, சட்டத்தரணியின் குறுக்கு விசாரணைக் கேள்விகளால் தனக்கு நெஞ்சுவலி ஏற்பட்டிருக்கின்றது என நீதிமன்றத்தில் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு தெரிவித்தார்.

கடந்தவாரம் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை செய்யப்பட்ட போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

2005 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி லக்ஷ்மன் கதிர்காமரைக் கொலை செய்யத் திட்டம் தீட்டியமை, கொலை செய்தமை உட்படப் பல குற்றச்சாட்டுகள் 2008 ஆம் ஆண்டு கொழும்பு மேல்நீதிமன்றத்தில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் பொட்டம்மான், சாள்ஸ் மாஸ்டர் மற்றும் முத்தையா சகாதேவன், இசிதோர் ஆரோக்கியநாதன் ஆகியோர் மீது சுமத்தப்பட்டது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்தமையை அடுத்து பிரபாகரன், பொட்டம்மான், சாள்ஸ் மாஸ்டர் ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டு எஞ்சிய இருவருக்கும் எதிராகப் பெயர் குறிப்பிடப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த வாரம் விசாரணையின் போது அரச சாட்சியாக சாட்சியம் அளிக்க அரச தரப்பால் உதவிச் சட்ட வைத்திய அதிகாரி எச்.பி. விஜயவர்த்தன அழைக்கப்பட்டார். அவரின் சாட்சியத்தை அரச சட்டத்தரணி நெறிப்படுத்தினார்.

### சாட்சியம்

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சாந்த 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி எதிரியான ஆரோக்கியநாதனை தன் முன்னிலையில் வைத்திய பரிசோதனைக்கு முன்னிலைப்படுத்தினார் எனவும் -

தான் எதிரியிடம் வினவிய பொழுது பொலிஸார் பொல்லினால் தன்னைத் தாக்கினர் என எதிரி கூறினார் எனவும் -

ஆனால், தான் எதிரியின் உடலைப் பரிசோதனை செய்தபொழுது எதிரியின் உடலில் பொலிஸார் தாக்கியதற்கான எந்தக் காயங்களோ அல்லது தழும்புகளோ காணப்படவில்லை எனவும் - சட்ட வைத்திய அதிகாரி தமது சாட்சியத்தில் கூறினார்.

அரச சட்டத்தரணி அவரின் சட்ட வைத்திய அறிக்கையை நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

அடுத்து இந்த வழக்கில் 2 ஆம் எதிரியின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா சட்ட வைத்திய அதிகாரியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

''நீர் எதிரியை உடல் பரிசோதனை செய்த பொழுது எதிரியின் உடலில் பொலிஸார் தாக்கியமைக்கான எந்தக் காயங்களோ அல்லது தழும்புகளோ காணப்படவில்லையென சாட்சியமளித்துள்ளீர். -

தடிகளாலும் கேபிள் வயர்களாலும் இரும்புக் கம்பிகளினாலும் தாக்கி பொலிஸார் எதிரியை சித்திரவதை புரிந்தமையால் இந்த எதிரியின் உடலில் 13 தழும்புகள் காணப்படுகின்றன. ஆனால், உண்மையை மறைத்து, பொலிஸ் சார்பாக சாட்சியமளிக்கும் நோக்கில் உண்மைக்கு மாறாக சட்ட வைத்திய அறிக்கையும் தயாரித்தமை மட்டுமின்றி பொய்ச் சாட்சியமும் அளித்துள்ளீர்.'' - என சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா சாட்சியை பார்த்துக் கூறினார்.

அச்சமயம் அரச சாட்சியான சட்ட வைத்திய அதிகாரி, எதிரி தரப்பு சட்டத்தரணியின் கேள்விகளால் தனக்கு மார்பு வலி ஏற்படுகின்றது என நெஞ்சைப் பிடித்துக்கொண்டு நீதிமன்றில் தெரிவித்தார்.

எதிரியின் சட்டத்தரணி சாட்சியைப் பார்த்து ''கௌரவமான வைத்தியத் தொழில்புரியும் நீர் சத்தியம் செய்து நீதிமன்றில் அரசிற்கு சார்பாக உண்மையை மறைத்து பொய்ச் சாட்சி சொன்னால் நெஞ்சுவலி வரத்தான் செய்யும்.'' - என்றார்.

எந்த ஆதாரத்தின் அடிப்படையில் சட்ட வைத்திய அதிகாரியை இந்தக் கேள்விக்கு உட்படுத்துகின்றீர்கள் என மேல் நீதிமன்ற நீதிபதி எதிரி தரப்பு சட்டத்தரணியைப் பார்த்து கேள்வி எழுப்பினார்.

சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா அதற்குப் பதிலளித்தார்.

''சட்டமா அதிபரினால் இந்த வழக்கு 2008 ஆம் ஆண்டு இந்த நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வேளையில் எதிரி தரப்பில் ஆஜராகிய நான் இந்த வழக்கின் 2 ஆம் எதிரியை சட்ட வைத்திய அதிகாரி முன் ஆஜர்படுத்தி வைத்திய அறிக்கையை கோரும்படி விண்ணப்பித்தேன். அதை நீதிமன்றம் ஏற்று உத்தரவு பிறப்பித்தது. சட்ட வைத்திய அதிகாரி சமீர குணவர்த்தன முன்னிலையில் எதிரி வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

அந்த சட்ட வைத்திய அறிக்கையில் எதிரியின் உடலில் 23 காயத் தழும்புகள் உள்ளன என்பதுடன் இந்தக் காயத் தழும்புகளில் பொலிஸார் பொல்லுகளாலும் கேபிள் வயர்களாலும் இரும்புக் கம்பிகளினாலும் தாக்கியதால் 12 காயத் தழும்புகள் ஏற்பட்டுள்ளன எனவும் -

இந்தக் காயத்தழும்புகள் எதிரி பொலிஸாரின் கட்டுப்பாட்டில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்ட காலத்திலேயே ஏற்பட்டுள்ளன எனவும் -

மேலும், 2000 ஆம் ஆண்டு எதிரி சத்திரசிகிச்சைக்கு உட்பட்டதனால் உடலில் 11 தழும்புகள் உள்ளன எனவும் -

மொத்தமாக எதிரியின் உடலில் 23 காயத்தழும்புகள் இருக்கின்றன எனவும் -

அந்தச் சட்டவைத்திய அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்ட வைத்திய அதிகாரி சமீர குணவர்த்தனவின் வைத்திய அறிக்கை இந்த வழக்குக் கோவையில் உள்ளது.

2000 ஆம் ஆண்டில் செய்த சத்திர சிகிச்சையின் 11 தழும்புகளும், பொலிஸ் காவலில் தாக்கப்பட்டதில் 12 தழும்புகளுமாக மொத்தம் 23 தழும்புகளும் எதிரியின் உடலில் உள்ளன. நீதிமன்றம் அனுமதித்தால் எதிரி அதனை நீதிமன்றுக்குக் காட்டுவதற்கும் தயார்.

ஆனால், 2005 ஒகஸ்டில் எதிரியை பரிசோதித்த இந்த சட்ட வைத்திய அதிகாரி தாம் பரிசோதித்த போது எதிரியின் உடலில் எந்தத் தழும்பும் இல்லை என்கின்றார். குறைந்த பட்சம் 2000 ஆம் ஆண்டு சத்திர சிகிச்சையால் ஏற்பட்டு இப்போதும் இருக்கின்ற 11 தழும்புகளைக் கூட அவர் இல்லை என்கின்றார். இதிலிருந்து அவரது சாட்சியத்தின் நேர்மைத்தன்மை புரியும். - என்று தமது வாதத்தை முன் வைத்தார் சட்டத்தரணி கே.பி.தவராசா.

வழக்கு ஒக்ரோபர் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி எம்.நவாவி ஆஜரானார். 2 ஆம் எதிரியின் சார்பில் சட்டத்தரணிகளான தர்மஜா தர்மராஜா, அனோமா பிரியதர்சினி ஆகியோரின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராசா ஆஜரானார். (உ)

## தினசரி ராசி பலன் 26.09.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 10 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை. ஷஷ்டி திதி மாலை 4.41 மணி வரை. பின்னர் ஸப்தமி. நட்சத்திரம் அனுஷம் காலை 7.02 மணி வரை. பின்னர் கேட்டை. சித்தயோகம் காலை 7.02 மணிவரை. பின்னர் அசுபயோகம். இன்று ஷஷ்டி விரதம்.

**ராகுகாலம்** - மாலை 3.02 மணிமுதல் 4.32 மணிவரை.

**சுபநேரம்** - பகல் 10.32 மணிமுதல் 12.02 மணிவரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி**- புரட்டாதி மாத வளர்பிறை ஷஷ்டி. **பிறந்த நட்சத்திர வழிபாடு:** கேட்டை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** யோசனையான நாள். தனவரவு குறையும். வியாபாரத்தில் போட்ட முதலீடுகளில் நட்டமுண்டாகும். சிலருக்குச் செய்யும் தொழிலை இழக்க நேரும்.

**ரிஷபம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். அலைச்சல், தேகசுகக் குறைவு உண்டாகும். உத்தியோகத்தில் கடின உழைப்பு இருக்கும்.

**மிதுனம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் வளமாக இருக்கும். வியாபாரம் பன்மடங்கு பெருகும். மாணவர்களின் கல்வியில் ஆக்கபூர்வ முன்னேற்றமடைவார்கள்.

**கடகம்:** அனுகூலமான நாள். வியாபாரம் 'ஓஹோ' என்று விறுவிறுப்பாக நடக்கும். திட்டமிட்டபடி வெளிநாட்டுப் பயணம் சிலருக்கு அனுகூலமாகும்.

**சிம்மம்:** கவலையான நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். தொழிலில் கடின உழைப்பால் தேகசுகக் குறைவு உண்டாகும். உறவினர்கள், நண்பர்களால் உபத்திரவம் உண்டாகும்.

**கன்னி:** சம பலன்கள் காணப்படுகின்றன. புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். அரசியல்வாதிகள் மதிப்பு, மரியாதை குறையும்.வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும்.

**துலாம்:** மேன்மையான நாள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள். சுயதொழில் மேன்மை அடையும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் புத்துணர்வு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** நன்மையான நாள். உடல்வலிமையும் செயற்றிறனும் மேலோங்கும். தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். மாணவர்களுக்கு மேற்படிப்புக்கான செலவுகளுக்கு அரசு உதவி செய்யும்.

**தனுசு:** துயரமான நாள். தொழிலில் பல பிரச்சினைகள் உண்டாகி மன உளைச்சலுக்கு ஆளாவார்கள். உடல் நலனில் அக்கறை கொள்ள வேண்டியிருக்கும். நெருங்கிய உறவினர்களின் துக்க செய்தி கேட்க நேரும்.

**மகரம்:** அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். அரசு வழியால் சிலருக்கு வீடு, காணி என்பன கிடைக்கும். வெளிநாட்டு உறவினரிடமிருந்து பெறுமதியான பொருள்கள் கிடைக்கும்.

**கும்பம்:** மத்திமமான நாள். பொருளாதாரம் மத்திமமாக இருக்கும். தொழிலில் ஓரளவு முன்னேற்றம் உண்டாகும். வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பயணங்களைத் தவிர்க்கவும்.

**மீனம்:** கீர்த்தியான நாள். இதுவரை வாட்டி வதைத்த நோய் நீங்கி ஆரோக்கியமடைவார்கள். மாணவர்கள் படிப்பிலும், விளையாட்டிலும் முதன்மை பெறுவார்கள்.

சந்திராட்டமநாள்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதங்களில் பிறந்தோர் அவசியம் சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

## நாளை மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ். பிரதேசத்தில் - கைத்தொழிற்பேட்டை I, கைத்தொழிற்பேட்டை II ஆகிய இடங்களிலும் - கிளிநொச்சி பிரதேசத்தில் - கௌதாரிமுனை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார்.



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



107




## அத்தியாயம் - VII

## வடமராட்சியில் எமது வாழ்க்கை

வடமராட்சிக்குநாம்திரும்பியபோதும் எமது நிச்சயமற்ற வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் நிகழ்ந்துவிடவில்லை. பலாலி இராணுவத் தளத்துக்கு அண்மையில் தரைச் சண்டை நடைபெற்றதாயினும், வடமராட்சிப் பகுதிகள் விமானக் குண்டு வீச்சுக்கும் ஹெலிக்கொப்டர் தாக்குதல்களுக்கும் கடற்படையினரின் எறிகணைத் தாக்குதல்களுக்கும் இலக்காகின. நாம் தொடர்ந்தும் ஒரு போர்ச்சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்தத் தாக்குதல்கள் எமக்கு நினைவூட்டின. ஆகாயப் படையினரின் குண்டுவீச்சுகளும், ஹெலிக்கொப்டர்களின் தாக்குதல்களும் வடமராட்சி மக்களுக்குக் கிலியூட்டின. விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும்



ஆகாயத்தைச் சுற்றி வலம் வரும்போது பாதுகாப்புத் தேடி மக்கள் கலைந்து ஓடுவது பரிதாபக் காட்சியாக இருக்கும். வீடுகளில் பதுங்கு குழிகள் வைத்திருந்தோர் பிள்ளைகளை இழுத்துக் கொண்டு நிலவறைக்குள் ஓடி ஒளிந்து கொள்வர். பதுங்கு குழிகள் இல்லாதவர்கள் (இவர்களேபெரும்பான்மையினர்) ஆகாயத்தில் சுற்றும் விமானங்களின் போக்குகளை அவதானித்தபடி எந்தப் பகுதியில் குண்டுத் தாக்குதல் நிகழப்போகிறது என்பதைக் கணித்தபடி இருப்பார்கள்.

பலவகையான குண்டுகள் குடியிருப்புகள் மீது கொட்டப்பட்டன. மிகவும் சக்திவாய்ந்த வெடிகுண்டுகள் மட்டுமல்லாமல், பீப்பாய்களில் தயாரிக்கப்பட்ட எரிகுண்டுகளும் வீசப்பட்டன. இந்தப் பீப்பாய் எரிகுண்டு ஒன்று, ஒரு வீடு மீது விழுந்தால் முழுக் குடும்பமுமே எரிந்து சாக நேரும். வடமராட்சி மீது பறந்து செல்லும் போக்குவரத்து விமானங்களிலிருந்து இந்தப் பீப்பாய் எரிகுண்டுகள் வீசப்பட்டன. மிகவும் அருவருக்கத்தக்க விடயம் என்னவென்றால், பீப்பாய்களில் மலத்தை அடைத்து ஆகாயத்திலிருந்து தமிழர்கள் மீது கொட்டியமைதான். இந்தச் செயலானது சிங்கள, ஆகாயப் படையினரின் இனவெறிக் குரோதத்தை வெளிப்படுத்தியது. ஒலியை விட வேகமாகச் செல்லும் 'சுப்பர்சொனிக் ஜெட்' விமானங்களின் வருகை, தமிழர்களுக்கு எதிரான போரில் ஒரு பயங்கரமான புதிய பரிமாணத்தைத் திறந்தது. கறுப்புப் புள்ளிகள் போன்று ஆகாய வெளியில் இவை சுற்றும்போது, அவை சாவின் சகுனமாகவே தென்படும். தமது அழிவாயுதங்களைக் கழற்றி விடுவதற்காக, அவை செங்குத்தாகக் கீழிறங்கும் போது ஏற்படும் கிறீச்சிட்ட அலறல் சத்தம் இரத்தத்தை உறைய வைக்கும். குடியிருப்புகள் மீதாக இந்த ஜெட் குண்டுவீச்சு விமானங்கள் நிகழ்த்தி வந்த கண்மூடித்தனமான தாக்குதல்களால் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வதிலும் காயப்படுத்துவதிலும், கிலிகொள்ளச் செய்வதிலும் ஆயுதம் தரித்த ஹெலிக்கொப்டர்களும் தமது பங்கைச் செய்யத் தவறவில்லை. ஆகாயத்தில் சுற்றியவாறு அப்பாவி மக்களை வேட்டையாடுவது ஹெலிக்கொப்டர் ஓட்டிகளுக்கு ஒரு பொழுதுபோக்கு. உதாரணத்துக்கு, நான் ஒரு தடவை பருத்தித்துறையிலுள்ள மந்திகை மருத்துவமனைக்கு முன்பாக வசித்து வந்த எனது நண்பர்களைச் சந்திப்பதற்காகச் சென்றிருந்தேன். அப்பொழுது அந்தப் பக்கமாக ஒரு ஹெலிக்கொப்டர் வரும் சத்தம் கேட்டது. ஆபத்து வரப்போகிறது, எங்கோ தாக்குதல் நிகழப் போகிறது என நாம் எதிர்பார்த்தோம். திடீரென, தானியங்கி இயந்திரத் துப்பாக்கியின் வேட்டுகள் அதிரத் தொடங்கின. தாழப்பறந்தவாறு, பருத்தித்துறை சந்தைப் பகுதியில் நின்ற பொதுமக்களைக் குறிவைத்துக் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தப்படுகிறது. பின்னர், அந்த வேடிக்கை விளையாட்டை முடித்துக்கொண்டு மந்திகை மருத்துவமனையை நோக்கி அந்த ஹெலிக்கொப்டர் பறந்து வந்தது. இயந்திரத் துப்பாக்கி ரவைகளிலிருந்து தப்புவதற்காக நாம் ஓடிச் சென்று, சிமெந்து சுவர்களுக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டோம். அரைமணிநேரம் வரை தனது 'களியாட்ட விளையாட்டை' நடத்திவிட்டு, அந்த ஹெலிக்கொப்டர் அங்கிருந்து பறந்து சென்றது. அதிஷ்டவசமாக இந்தத் தாக்குதலின் போது எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

ஆயுதம் தரித்த ஹெலிக்கொப்டர்கள் இவ்விதம் அடிக்கடி தாழப் பறந்து கண்மூடித்தனமாகத் தாக்குதல்களை நிகழ்த்தி வந்தமையால், வாகனங்களில் பயணம் செய்வது கூட ஆபத்தானதாக முடியும். மேலாகப் பறந்து திரியும் ஹெலிக்கொப்டர்களின் கவனத்தை ஈர்க்காமல் தப்புவதற்கு நாம் எமது காரை எத்தனையோ தடவைகள் மர நிழல்களின் கீழ் மறைத்து வைக்க நிர்ப்பந்திக்கப்பட்டோம். வடராட்சியையும் வலிகாமத்தையும் இணைக்கும் வல்லைவெளி வீதியை கார் கடக்கும் போது, ஆயுதம் தரித்த ஹெலிக்கொப்டர் ஒன்று எம்மைத் துரத்தி வந்தது இப்பொழுதும் எனக்கு நினைவில் இருக்கிறது. இரு மைல்கள் தூரமான இந்தத் திறந்த வீதியில் ஹெலிக்கொப்டர்கள் பல அனர்த்தங்களைப் புரிந்திருக்கின்றன. மக்கள் பயணிக்கும் பஸ்கள், வாகனங்கள் மீது இயந்திரத் துப்பாக்கியாலும் ஏவு கணைகளாலும் தாக்குதல்களை நடத்தி அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றும் காயப்படுத்தியும் இருக்கின்றன. இந்தத் திறந்த வெளி வீதியால் பயணிகளை ஏற்றிவரும் பஸ்கள், மேலாகப் பறந்து வரும் ஹெலிக்கொப்டர்களிடமிருந்து ஓடித்தப்புவது இலகுவான காரியமல்ல. எனவே, அப்பாவிப் பொதுமக்களைக் குறிவைப்பதில் இன்பம் காணும் ஹெலி ஓட்டிகளுக்கு பஸ்கள் இலகுவான இலக்குகளாகிவிட்டன.

வடமராட்சியின் அழிவுக்கு சிறிலங்கா கடற்படையும், தனது பங்கை ஆற்றுவதற்குத் தவறவில்லை. வல்வெட்டித்துறை, பருத்தித்துறை கரையோரமாகக் கடற்படையினரின் போர்க்கப்பல்கள் தொடர்ச்சியாக நடத்திய



ஏவுகணைத் தாக்குதல்களால் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அத்துடன், பல நூற்றுக்கணக்கான வீடுகளும் நாசமாக்கப்பட்டன. பருத்தித்துறை கடலோரத்திலிருந்து சில நூறு யார்கள் தொலைவில் தும்பளை எனும் கிராமமுண்டு. தமிழ்மொழி கற்றுக்கொள்வதற்காக இங்குள்ள ஒரு வீட்டுக்கு நான் சென்றுவருவதுண்டு. அப்பொழுது ஒரு தடவை அந்தக் கிராமம் நோக்கிக் கடற்படையினர் கடுமையான தாக்குதலை நடத்தினர். அப்பொழுது நானும் எனது ஆசிரியையும் பதுங்குகுழிக்குள் தஞ்சம் புக நேர்ந்தது.

இப்படியான சூழ்நிலையில், நிலத்தின் அடியில் நாம் ஒளிந்து வாழ வேண்டியிருந்தது. நாம் எந்த வீட்டில் குடியமர்ந்தாலும் முதல் வேலையாக, அந்த வளவில் ஒரு பதுங்குகுழியை அமைக்கத் தவறமாட்டோம். ஆறு அடி ஆழமும் இரண்டு அடி அகலமுமாக நிலத்தை வெட்டி, முன்புறமாகவும் பின்புறமாகவும் வாசற்படிகள் அமைத்து, அதன் மீது பெரிய மரக்குத்திகளை அடுக்கி, அதற்கு மேலாக மண்சாக்குகளைப் போட்டு பதுங்கு குழிகளை நிறுவுவோம். முதலில் யாழ்ப்பாணத்திலும் பின்னர் வன்னியிலும் நாம் வசித்த காலத்தில் இதுபோன்ற இருண்ட நிலவறைகள் தான் எமது பாதுகாப்புக்கான புகலிடமாக அமைந்தன. எமது பாதுகாப்புக்கான மெய்ப்பாதுகாவலராக போராளிகள் குழுவொன்று, எமது இருப்பிடத்துக்கு அயலான வீட்டில், அல்லது எமது காணிக்குள் குடிசைகள் அமைத்து எம்மோடு வாழ்ந்துவரும். எமது வீட்டைச் சுற்றியுள்ள வேலிகள் ஏழு அடி உயரம் வரை இரும்புத் தகடுகளால் அமைக்கப்பட்டன. வெளியே இருந்து பார்த்தால் ஒரு 'மினி' இராணுவ முகாம் போன்ற தோற்றத்தைக் கொடுக்கும். நாம் விரும்புகின்றோமோ இல்லையோ விடுதலைப் புலிப் போராளிகளின் வாழ்க்கைமுறை இப்படித்தான். இந்த இருப்பிடங்களின்வெளித்தோற்றத்தைப் பார்த்துவிட்டு, இவை இயக்கத்தின் வீடுகள் எனப் பொதுமக்கள் கணித்துக் கொள்வார்கள்.

(தொடரும்...)

தமிழ்த் தேசத்துக்காக - எம் மக்களுக்காக - எங்கள் வீரமகன் திலீபன் (இராசையா பார்த்திபன்) வீரச்சாவடைந்த 30 ஆவது வருட நினைவு நாள் இன்றாகும். அதனை நினைவு கூர்ந்து அவனின் நினைவுகள் இங்கே மீட்கப்படுகின்றன.



# எங்கே போய்விட்டாய் திலீபா...?

காலை ஒன்பது மணியிருக்கும் பாடசாலைப் பிள்ளைகள் வரிசையாக வந்து திலீபனைச் சந்தித்து விடைபெறுகிறார்கள். எல்லோருடனும் அவர் அன்பாகப் பேசுகிறார். வோக்கி டோக்கியில் தலைவருடன் சில நிமிடங்கள் பேசுகிறார். பேசிவிட்டு அந்த மண்ணிற வாகனத்தை நோக்கி நடக்கிறார். எல்லோரும் பின் தொடர்ந்தோம். ஆம், அவரது தியாகப் பயணம் ஆரம்பமாகிவிட்டது. மிக மிடுக்காக நடந்து முன் ஆசனத்தில் போய் ஏறினார்.

அவரது பக்கத்தில் சொர்ணம், அன்ரன் மாஸ்ரர், முரளி. பின் ஆசனத்தில் காசி ஆனந்தன், ராஜன், நான் (வாஞ்சி) வேறும் சிலர். வாகனம் நல்லூர் கந்தசுவாமி கோவிலை நோக்கி ஓடுகிறது. பாதையின் இரு பக்கத்திலும் மாணவர்களும், பொது மக்களும் கையசைத்து வழியனுப்புகிறார்கள். நல்லூர் கந்தசுவாமி கோவிலைச் சென்றடைந்தோம். வாகனம் நின்றது. திலீபன் உண்ணாவிரத மேடை நோக்கிச் செல்கிறார். நாங்களும்பின்னால்போய்க்கொண்டிருக்கிறோம்.

**தமிழீழத் தாயின் எதிர்பாராத ஆசி!**



எதிர்பாராத விதமாக அந்த நிகழ்ச்சி நடந்தது. வயதான ஓர் அம்மா. தள்ளாத சிவந்த நிற மேனி. பழுத்த தலை. ஆனால், ஒளி தவளும் கண்களில் கண்ணீர் மல்கத் திலீபனை மறித்து தன் கையில் இருந்த அர்ச்சனை சரையில் இருந்து நடுங்கும் விரல்களால் திருநீற்றை எடுத்து திலீபனின் நெற்றியில் பூசுகிறார். சுற்றியிருந்த கமெராக்கள் எல்லாம் அந்தக் காட்சியைக் 'கிளிக்' செய்தன. வீரத் திலகமிடுகிறார் அந்தத் தாய். தாயற்ற திலீபன், அந்தத் தாயின் பாச உணர்வில் மூழ்கிப்போனார்.

**போராளி மேஜர் பிரசாத் ஆரம்ப உரை**

காலை 9.45 மணி. உண்ணா விரத மேடையிலே நாற்காலியிலே திலீபனை அமர வைத்தோம். திலீபனின் அருகே நான் (வாஞ்சி), ராஜன், பிரசாத், சிறி ஆகியோர் அமர்ந்திருந்தோம். திலீபனின் தியாகப் பயணம் ஆரம்பமாகிவிட்டது. அன்று பக்கத்திலிருந்த மேடையில் பிரசாத்தின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. நடேசன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் திலீபனின் உண்ணா விரதம் எதற்காக ஆரம்பிக்கப்படுகிறது என்பதைப் பற்றி விளக்கம் அளித்தார்கள்.

## நீ மரணிக்கவில்லை...! இன்றும் வாழ்கிறாய் எம்மோடு...!!

தமிழ் மக்களினதும், தமிழர் தாயகத்தினதும் உரிமைகளைப் பேணும் நோக்கமாக இந்திய மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகளும் விளக்கப்பட்டன.

**ஐந்து அம்சக் கோரிக்கைகள்**

1) பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இன்னமும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்படல் வேண்டும்.

2) புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

3) இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்படல் வேண்டும்.

4) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

5) இந்திய அமைதிப் படையின் மேற்பார்வையில் ஊர்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு தமிழ்க்கிராமங்கள், பள்ளிக்கூடங்களில் குடிகொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்படவேண்டும்.


இதே கோரிக்கையை இரண்டு தினங்களுக்கு முன்பு இந்தியத் தூதுவரின் கையில் நேரடியாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி 24 மணித்தியால அவகாசமும் விடுதலைப்புலிகளால் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், 15 ஆம் திகதி வரையும் தூதுவரிடமிருந்து எந்தப் பதில்களும் கிடைக்காத காரணத்தால் சாகும் வரை உண்ணா விரதமும் மறியல் போராட்டமும் நடத்துவது எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

**வாசிப்பதற்கு புத்தகங்கள் கேட்ட திலீபன்**

அதன்படிதான் இந்தத் தியாகச் செம்மலின் தியாகப்பயணம் ஆரம்பித்தது. பிற்பகல் 2 மணி இருக்கும் திலீபன் கம்பீரமாக வீற்றிருந்தார். உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மணித்தியாலங்கள் முடிந்துவிட்டன. இரண்டாவதுமேடையிலே நடைபெற்றுக்கொண்டிருந்த உண்ணாவிரத விளக்கக் கூட்டம் முடிவடைந்துவிட்டது. படிப்பதற்கு புத்தகம் வேண்டும் என என் காதில் குசுகுசுத்தார் திலீபன். நான் ராஜனிடம் சொன்னேன்.

15 நிமிடங்களில் பல அரிய நூல்கள் மேடைக்கு வந்தன. விடுதலைப் போராட்டங்கள் பற்றி அறிவதற்கு திலீபனுக்கு ஆர்வம் எப்போதும் உண்டு. பிடல் காஸ்ரோ, சேகுவேரா, கொஜூமின்,யசிர் அரபாத் போன்றவர்களின் வாழ்க்கையைப் பற்றிய நூல்களைநேரம் கிடைக்கும்போதெல்லாம் படிப்பார்.

*(11 ஆம் பக்கம் பார்க்க...)*



காலைக்கதிர் Kalaikkathir





# தமிழ் மக்களுக்காக இன்னுயிரை நீத்த தியாகி எங்கள் திலீபன்

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பலஸ்தீன மக்களின் வாழ்க்கையைப் பற்றிப் படிப்பதென்றால் அவருக்கு பலாச்சுளை மாதிரி பிடிக்கும். பலஸ்தீனக் கவிதை என்ற நூலை அவரிடம் கொடுத்தேன்.

**திலீபனின் தியாகபயணம்...**

ஐரிஸ் போராட்ட வீரர் பொபிஸ் ஆன்ஸ் என்ன செய்தார்? சிறைக்குள் நீராகாரம் அருந்தித்தான் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து உயிர் நீத்தார். இந்த உண்ணாவிரதம் அரசின் தலையீட்டால் வெற்றி பெறுமானால் அந்த வெற்றி திலீபனையே சாரும். அதுபோல் இந்திய அரசு நடவடிக்கை எடுக்காமல் இறுதி உண்ணாவிரதம் இருந்தே திலீபன் இறக்க நேரிட்டால் அதில் கிடைக்கும் தோல்வியும் திலீபனுக்குக் கிடைக்கும் மாபெரும் வெற்றிதான்.

**வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம் நல்லூர்**

உலகின் புதிய அத்தியாயம் ஒன்றின் சிருஷ்டி கர்த்தா என்ற பெருமை அவனையே சாரும். ஆனால், அதற்காக எங்கள் குல விளக்கை நாமே அணைக்க வேண்டுமா? இறைவா திலீபனைக் காப்பாற்றிவிடு. கூடியிருந்த மக்கள் நல்லூர் கந்தனிடம் அடிக்கடி இப்படி வேண்டிக்கொள்கிறார்கள். இதை நான் அவதானித்தேன். பழம் தமிழ் மன்னனாகிய சங்கிலியன் அரசாண்ட நல்லூர் அரசதானியிலே, தமிழ்க்கடவுள் ஆகிய குமரனின் சந்நிதியில் ஓர் இளம் புலி உண்ணாமல் துவண்டு கிடந்தது. ஒரு நல்ல முடிவு கிடைக்க வேண்டும். இல்லையேல், உலகில் நீதி செத்துவிடும். எனக்குள் இப்படி எண்ணிக் கொண்டேன். அன்று இரவு 11 மணியளவில் தலைவர் பிரபாகரன் திலீபனைப் பார்ப்பதற்காக மேடைக்கு வருகிறார்.

அவருடன் சொர்ணம், இம்ரான், அஜித், சங்கர், ஜொனி இப்படி பலரும் வருகின்றனர். வெகுநேரம் வரை தலைவருடன் உரையாடிக் கொண்டிருந்தார் திலீபன். யாரையும் அதிக நேரம் பேச அனுமதிக்க வேண்டாம் என்று போகும் போது என்னிடம் கூறிவிட்டுச்சென்றார் தலைவர். நீர், உணவு உட்கொள்ளாத ஒருவர் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பாரானால் விரைவில் களைப்படைந்துவிடுவீர். இதனால்தான் தலைவர் அப்படிக் கூறிவிட்டுச் சென்றார்.

**பத்திரிகையாளர் வருகை**

அன்றிரவு பத்திரிகை நிருபர்களும் பத்திரிகைத்துறையை சாந்தவர்களும் திலீபனைப் பார்க்க மேடைக்கு வந்திருந்தனர். முரசொலி ஆசிரியர் திருச்செல்வம், ஈழமுரசை சேர்ந்த பஸீர் போன்றோருடன் திலீபன் மனம் திறந்து பேசினார். அவரைக் கட்டுப்படுத்த எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அதிகம் பேசி உடம்பைக் கெடுத்துக்கொள்ளப் போகிறாரே என்பதால் அவரை அன்பாகக் கடிந்து கொண்டேன். இரவு 11.30 மணியளவில் கஷ்டப்பட்டு சிறுநீர் கழித்துவிட்டு 12 மணியளவில் படுக்கைக்குச் சென்றார்.

**முதல் நாள் முடிவு, அதிகாலை 1.30 மணிக்கு உறங்கினார்**

அவர் ஆழ்ந்து உறங்கத்தொடங்கியபோது நேரம் அதிகாலை 1.30 மணி. அவரின் நாடித்துடிப்பைப் பிடித்து அவதானித்தேன். நாடித் துடிப்பு 88. சுவாசத் துடிப்பு 20. அவர் சுய நினைவோடு இருக்கும் போது வைத்திய பரிசோதனைக்கு அனுமதிக்கமாட்டார். தனக்கு உயிர் மீது ஆசை இல்லை என்பதால், பரிசோதனை தேவை இல்லை என்று கூறுவார். அவர் விருப்பத்திற்கு மாறாக உணவோ, நீரோ, மருத்துவமோ இறுதிவரை அளிக்கக்கூடாது என்று முதல் நாளே என்னிடம் சத்தியம் வாங்கிவிட்டார். மேடைக்கு முன்பாக மகளிர் அமைப்பு உறுப்பினர்களும், பொதுமக்களும் கொட்டக் கொட்டக் கண்விழித்துக் கொண்டிருந்தனர்.

இதேநிலைமை பத்துப் பதினொரு நாள்கள் நீடித்தன. திலீபன் சோர்வடைந்து கொண்டிருந்தான்.

**பன்னிரண்டாம் நாள்**

எங்கும் ஒரே இருள்மயம். காற்றும் பலமாக வீசத் தொடங்கியது. பல நாள்களாகத் திலீபனுடன் சேர்ந்து நானும் எனது நண்பர்களும், முழுமையான தூக்கமில்லாமல் இருந்தமையால் இன்று மிகுந்த சோர்வுடன் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தோம்.

மாறன், ராஜன், தேவர், இரு நவீனங்கள், திலீபனின் அண்ணன், இளங்கோ, எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு தூங்கினோம்.

பன்னிரண்டு நாள்கள் உடல்களைச் சாறாகப் பிழிந்தெடுத்த அசதித் தூக்கமின்றி, அதுவேறொன்றுமில்லை. மேடைக்கு முன்னே அமர்ந்திருந்த ஒருவர் என்னை வந்து தட்டி எழும்பியமையும் நான் தான் முதலில் திடுக்கிட்டு எழும்பினேன்.

கும்மிருட்டில் என்ன செய்வதென்று தெரியாமல், நவீனன் என்று அழைத்தபடி திலீபனின் கட்டிலில் கையை வைத்தேன்

**ஆடாமல் அசையாமல்....**

அவர் ஆடாமல் அசையாமல் படுத்திருந்தார். அதனால் மனம் அமைதியடைந்தது. அவரின் உடல் ஜில்லென்று பனிக்கட்டியைத் தொடுவது போல் குளிர்ந்து காணப்பட்டது.

மனம் ‘பட பட’ வென்று அடிக்கத் தொடங்கியது. மீண்டும் ‘நவீனன்’ என்று அழைத்தேன்.

நவீனன் எழும்பி விட்டான்.

ஐந்து நிமிடங்களில் மேடையில் ஒரு பெரிய மெழுகுவர்த்தி எரியத் தொடங்கியது? மெழுகுவர்த்தியின் ஒளியிலே திலீபனின் முகம் நன்றாகத் தெரிந்தது. ஒரே வினாடிதான்! அதற்குள் அந்த மெழுகுவர்த்தி காற்றின் வேகத்தால் அணைந்து விட்டது.

பலத்து வீசிய காற்று அதை மீண்டும் எரிய விடுமா? என்பது சந்தேகமாகத்தான் இருந்தது. ஆனால், ஐந்து நிமிடங்களில் மின்சாரம் வந்துவிட்டது. திலீபனின் நிலை எல்லையைக் கடந்துவிட்டது என்பது எனக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. அதனால், என் மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. நாடித்துடிப்பைப் பரிசோதிக்கிறேன். கணிக்க முடியவில்லை. மிகவும் மெல்லியதாக அடிக்கிறது. உடனே இரத்த அழுத்தத்தைக் கணிக்கின்றேன். அது மிகவும் குறைவாக இருக்கிறது.

**சத்தியத்தை மீறலாமா?**

50 என்ற நிலையில் ஒரு நோயாளியால் இன்னும் எத்தனை மணித்தியாலங்கள் உயிர் வாழ முடியும் என்பது எனக்குத் தெரியும்.

உலகமே தலைகீழாகச் சுற்றுவது போல் இருந்தது. திலீபன் அடிக்கடி கூறிய வார்த்தைகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன.

வாஞ்சி அண்ணை! எனக்கு என்ன நடந்தாலும் நீங்கள் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட பலவந்தமாகவோ, சுய நினைவற்ற நிலையிலோ தர முயற்சிக்கக்கூடாது. அப்படி என் கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் நான் இறக்கும் மட்டும் எனக்கு எந்தவிதமான சிகிச்சையும் அளிக்கக் கூடாது. சுய நினைவோடு என்றாலும் சரி. சுய நினைவில்லை என்றாலும் சரி. இதுக்குச் சம்மதிக்கிறனெண்டு சத்தியம் செய்து தாருங்கோ என்று விடாப்பிடியாக நின்று என்னிடம் சத்தியம் வாங்கிய பிறகுதான் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார் அவர்.

அப்படியிருக்க, அவர் விருப்பத்துக்கு மாறாக எப்படி அவருக்குச் சிகிச்சையளிப்பேன்?

எப்படி அவருக்கு நீர் ஊட்டுவேன்?

(19 ஆம் பக்கம் பார்க்க...)

## ‘மக்கள் புரட்சி வெடிக்கட்டும்’ திலீபனின் இறுதி உரை...!



என்னால் பேச முடியவில்லை. ஆயினும், என் மனம் மகிழ்ச்சியில் மிதக்கின்றது. நீங்கள் பல்லாயிரக் கணக்கில் இந்தப் புரட்சிக்குத் தயார்பட்டுவிட்டமையை என் கண்கள் பார்க்கின்றன. நான் திருப்தி அடைகிறேன். இன்று பேசமுடியாத நிலை இருக்குமென நினைத்தேன். ஆனால், நீங்கள் தந்த உற்சாகம்தான் என்னை இப்போதும் வாழ வைத்துக் கொண்டுள்ளது.

நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற ஒவ்வொரு மக்களும் இந்தப் பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும். நான் நேற்றும் கூறிவிட்டேன் எனது இறுதி ஆசை இதுதான். நான் மீட்கப்பட முடியாத நிலைக்குச் சென்றுவிட்டமையை உணர்கிறேன். ஆனால், பெரும் பணியை உங்களிடம் விட்டுச் செல்கிறேன். நான் மிகவும் நேசித்த என் தோழர்கள், என் சகோதரிகள் எல்லாவற்றிலும் மேலாக என் தலைவன் திரு. பிரபாகரன் அவர்கள் உங்களுடன் இருக்கிறார். நீங்கள் பரிபூரணமாகக் கிளர்ந்தெழ வேண்டும்.

மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! இப் புரட்சி நான் என்னுயிருக்கு மேலாக நேசிக்கும் என் மக்களுக்குக் கிடைக்கட்டும். எமது எதிர்கால சந்ததி வாழ ஒரு நாடு தேவை. அல்லாவிட்டால் நாளை எங்களைப் போல்தான் எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும்; வருத்தப்படும்.

எனது மூளை இப்போது எதனையும் நன்றாகக் கிரகிக்கவில்லை என்பது எனக்கு விளங்குகிறது. இதில் பிழைகள் இருக்கலாம். இதை நீங்கள் பொறுத்துக்கொள்ளுங்கள்.

காலைக்கதிர் Kalaikkathir



# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 302

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

அவர்களில் பெரும்பான்மையினர் வடக்கில் இருந்தவர்கள் என்பதையும், அப்போரில் அந்நாட்டின் ஒவ்வொரு நகரமும் அமெரிக்கக் குண்டுகள் மற்றும் வெடிகுண்டுகளால் இடிபாடுகளாகச் சிதைக்கப்பட்டன என்பதையும் நினைவு கூருபவர்கள் இன்றும் வட கொரியாவில் இருக்கிறார்கள் என்பதை ஒருவர் ஊகிப்பது கடினம் இல்லை. அவர்களைப் பொறுத்த வரையில், ஆத்திரம் மற்றும் சீற்றத்தைத் துணைக்கு இழுப்பது வெறுமனே மிகைமிஞ்சிய வாய்சவடால் கிடையாது. அப்போதிருந்து, அமெரிக்கா, வட கொரியாவின் எல்லைகள் மீது ஒரு பெரிய இராணுவப் பிரசன்னத்தைத் தக்கவைத்துள்ளது. அதே வேளையில், அது அணு ஆயுதக் குண்டுகள், நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் போர்க்கப்பல்களைக் கொண்டு வழமையாக அதை எச்சரித்து வருகிறது.







கடந்த கால் நூற்றாண்டில் ஒவ்வோர் அமெரிக்க ஆக்கிரமிப்பு போரைப் போலவே, வட கொரியாவுடனான இப்போதைய இந்த இராணுவ மோதலின் ஆயத்தப்படுத்தலும் – வட கொரியத் தலைவர் கிம் ஜாங்-உன்னுக்கு முன்னர் நோரிகா, மிலோசெவிக், சதாம் குசைன் மற்றும் கடாபி போலவே – இவரும் 'பைத்தியக்காரத் தனமாக' இருக்கிறார் என்ற குற்றச்சாட்டுடன் தயாரிப்புச் செய்யப்பட்டு வருகிறது.

பெரிய பேரழிவுகர ஆயுதங்களால் அல்லது பயங்கரவாதத்தால் அமெரிக்காவுக்கு ஏதோவித பயங்கர அச்சுறுத்தல் முன்நிறுத்தப்பட்டதாக அல்லது அமெரிக்க வெடிகுண்டுகளால் மட்டுமே எதிர்கொள்ளக்கூடிய ஓர் உடனடி 'மனித உரிமை' பேரிடர்கள் நிகழவிருக்கின்றன என, ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா மற்றும் பிற இடங்களின் முந்தைய போர்களுக்கு ஒரு சாக்குப்போக்கு கண்டுபிடிக்கப்பட்டது. வடகொரியாவின் அணு ஆயுதப் பிரச்சினை இதிலிருந்து வித்தியாசமானதல்ல.

**வொஷிங்டனை சாந்தப் படுத்தத் தங்களின் ஆயுதத் திட்டங்களைக் கைவிட்ட ஈராக்கின் சதாம் ஹுசைன், லிபியாவின் கடாபி இருவரும், அவர்களே கூட கொல்லப்படுவதற்கு முன்னர் அவர்களது நாடுகள் மீது படையெடுக்கப்பட்டு அழிக்கப் பட்டமையைக் கண்டனர்.**

இஸ்ரேல், பாகிஸ்தான் மற்றும் இந்தியா உட்பட பிறநாடுகள் அணு ஆயுதங்களைப் பெறுவதற்கும், சில விடயங்களில் அமெரிக்க உதவியுடனும் கூட அவற்றைப் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், வட கொரியா அணு ஆயுதங்களை வைத்திருப்பது மட்டும் அமெரிக்காவுக்கு ஏன் ஓர் அபாயகரமான அச்சுறுத்தலாக உள்ளது என்பது ஒருபோதும் விளக்கப்படவேஇல்லை. வெளிப்படையாகவே அமெரிக்காவின் கூட்டாளிகளான இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே ஓர் அணுஆயுத மோதலுக்கான அச்சுறுத்தல், வாதத்திற்கு எடுத்துக் கொண்டால், கொரிய தீபகற்பம் மீதான எந்தவோர் அச்சுறுத்தலைக் காட்டிலும் பெரிதாக உள்ளது.

இந்தத் தீவிரமடைந்து வரும் போர் நெருக்கடி, 'அமெரிக்காவின் உற்பத்தி' என்ற முத்திரையைத் தாங்கியுள்ளது. வோஷிங்டன் தொடுத்த முந்தைய ஆக்கிரமிப்புப் போர்கள், வட கொரிய தலைமையின் நடவடிக்கையில் தாக்கத்தைக் கொண்டுள்ளன. வொஷிங்டனைச் சாந்தப்படுத்தத் தங்களின் ஆயுதத் திட்டங்களைக் கைவிட்ட ஈராக்கின் சதாம் ஹுசைன், லிபியாவின் கடாபி ஆகிய இருவரும், அவர்களே கூடக் கொல்லப்படுவதற்கு முன்னர் அவர் களது நாடுகள் மீது படையெடுக்கப்பட்டு அழிக்கப்பட்டமையைக் கண்டனர்.





அவர்களது தலைவிதியைப் பார்த்த பின்னர், வட கொரியா அதன் அணு ஆயுதத் தகைமையை அபிவிருத்தி செய்து பேணுவதற்கு அது தீர்மானமாக இருப்பதில் 'பைத்தியக்காரத் தனம்' எதுவும் கிடையாது. 'பைத்தியக் காரத்தனம்' இல்லை என்றாலும், வட கொரிய தலைமை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பித்துநிலையைப் பிழையாகக் கணக்கிடுகிறது. அமெரிக்கா அதன் நோக்கங்களை முன்னெடுக்க அணு ஆயுதப் போருக்கு எதிரான முந்தைய கட்டுப்பாடுகளைக் களையத் தயாராகி வருகிறது.

இந்த நோக்கங்கள் வறிய மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட நாடான வட கொரியாவின் அரசாங்கம் பின்பற்றும் கொள்கைளுக்கு எதிராகத் திருப்பி விடப்பட்டவை அல்ல. மாறாக, அதன் எல்லைகளில் உள்ள, அணுஆயுத சக்திகளான சீனா மற்றும் ரஷ்யாவை நோக்கி திருப்பிவிடப்பட்டவை ஆகும். இந்த இரு நாடுகளையும் வொஷிங்டன் யூரேஷிய பெருநிலத்திலும் ஒட்டுமொத்த புவியின் மீதும் அதன் மேலாதிக்கத்தைச் செலுத்துவதற்கான அதன் முனைவுக்குத்தலையாய தடைகளாகப் பார்க்கிறது.

அது வட கொரியாவுக்கு எதிராகப் போரைக் கொண்டு அச்சுறுத்துகின்ற அதேவேளையில், வொஷிங்டன் தென் சீனக் கடலில் சீனாவுக்கு எதிராக 'கடல் போக்குவரத்து சுதந்திரம்' என்ற ஆத்திரமூட்டல்களை அதிகரித்து வருகிறது மற்றும் ரஷ்யாவுக்கு எதிராக பால்டிக் பகுதியில் ஓர் ஆத்திரமூட்டும் இராணுவ ஆயத்தப்படுத்தலை மேற்கொண்டு வருகிறது.



கொரிய தீபகற்பத்தில் ஒரு புதிய போரானது, 65 ஆண்டுகளுக்குமுந்தைய போரில் நடந்ததைப் போலவே, சீனா மற்றும் ரஷ்யாவை உள்ளிழுக்கும் அனைத்து சாத்தியக் கூறையும் கொண்டுள்ளதுடன், ஓர் அணுஆயுத மூன்றாம் உலகப்போர் அச்சுறுத்தலை முன்னிறுத்துகிறது.

வடகொரியாவுக்கு எதிராக அணு ஆயுதமற்ற போர்ச்சூழலின் நல்விடயமாக இருந்தாலும், அதிலும் கூட நூறாயிரக்கணக்கான மக்கள் இல்லையென்றாலும் பத்தாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்படுவார்கள்.

(கேள்வி தொடரும்)

# ஈழத்தமிழர் துயரத்தின் சின்னம்

# யாழ்ப்பாண கோட்டை



யாழ்ப்பாணக் கோட்டையால் யாழ்ப்பாண மக்கள் சுமந்த வலிகளும் வேதனைகளும் மறக்கப்பட்டு அல்லது மறக்கச்செய்யப்பட்டுவருகின்றன.

யாழ்ப்பாணத்து மக்களைப் பொறுத்தவரை இது ஒரு துயரத்தின் சின்னம். இலங்கை மக்களைப் பொறுத்தவரை இது அடிமைத்தளையின் சின்னம்.

நீண்ட ஈழப் போராட்ட வரலாற்றை நோக்கினால் கோட்டை தவிர்த்து அதனைக் குறிப்பிடவே முடியாது.

ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி சமாதானத்தை ஏற்படுத்த வந்த இந்திய தேசத்து அமைதிப்படை, காந்திய வழியில் நியாயம் கேட்டு ஓர் உயிர் ஆகுதியாக்கப்பட்ட (திலீபனின் மரணம்) பின்னும் தனது சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவில்லை. மாறாக, ஆயுதவழியில் ஈழத் தமிழ் மக்களின் போராட்டத்தை நசுக்கும் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தியது.

இதன் முதற்கட்டமாக சமகால அரசியல் நிலைமை தொடர்பான கருத்துக்கள் மக்களைச் சென்றடையாத வண்ணம் யாழ்ப்பாணத்தில்


விஷேட பதிப்பு 26 - 09 - 90

முரசொலி

விலை ரூபா 2-00

★ இன்று முற்பகல் சரித்திரப் பெருமை மிக்க நிகழ்வு

கோட்டையில் புலிக்கொடி

திலீபன் கனவு நனவானது

இயங்கிய பத்திரிகை அலுவலகங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

சுயாதீன வானொலிகள், தொலைக்காட்சி சேவைகள் அனைத்தும் முடக்கப்பட்டன. தொடர்ந்து விடுதலைப் புலிகளின் தலைமையை அழிக்கும் நோக்கில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட வளாகத்தில் இந்திய சிறப்பு பரா துருப்பு ஒக்ரோபர் 10 ஆம் நாள் ஹெலிக்கொப்டர்கள் மூலம் தரையிறங்கித் தாக்குதலை ஆரம்பித்தது.

இராணுவம், முகாம்களில் இருந்து அகோரமான எறிகணை மற்றும் விமானத் தாக்குதல்களை நடத்திக் கொண்டு முன்னேறியது. ஆட்லறி, எறிகணைகள் மக்கள் வாழ்விடங்களுக்குள் வீழ்ந்து வெடித்துச் சிதறின. விமானப்படை மக்கள் குடியிருப்புக்களை, மக்கள் அதிகம் கூடுமிடங்களை இலக்குவைத்துத் தாக்குதலை மேற்கொண்டது. இதனால் பல நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்; காயமடைந்த பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்திய இராணுவத்தின் தொடர் தாக்குதல்களால் திகிலடைந்த மக்கள், எங்கும் பாதுகாப்புத் தேடுவது எனத் தெரியாமல் தவித்தனர். பலர் பதுங்கு குழிகளை வெட்டித் தற்காப்பு தேடினார்கள். சிலர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியிடங்களுக்கு அகதிகளாக வெளியேறினர். பலர் பாதுகாப்பானது எனக் கருதி கோயில்களிலும் தேவாலயங்களிலும் அடைக்கலம் தேடினர்.

**ஈழ யுத்த காலப்பகுதி**

யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேறவிடாது தமிழ்ப் போராளிக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகை ஈழ யுத்தத்தின் திருப்பு முனையாக அமைந்தது.

உலக போராட்ட வரலாற்றிலேயே மிக நீண்ட கால முற்றுகையாக இது அமைந்திருந்தது. 3 வருடங்கள், 23 நாள்கள் இலங்கை இராணுவத்தினரை கோட்டைக்குள் முடக்கி, முழுமையான முற்றுகைக்குள் தமிழ்ப் போராளிக் குழுக்கள் வைத்திருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து 1984 ஆம் ஆண்டு புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற விடுதலை இயக்கங்களும் இந்த முற்றுகைப் போராட்டத்தில் இணைந்து பங்கெடுத்தன.

1984 ஆம் ஆண்டு ஜூலை மாதம்

## கோட்டையைக் கைப்பற்றிய வெற்றிச் சமர்!



கோட்டைப் படைத்தளம் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருந்தமைமட்டுமன்றி, யாழ்ப்பாண நகரில் வாழ்ந்த மக்களின் உயிருக்கும் அச்சுறுத்தலாக இருந்தது. இந்தக் கோட்டை முகாமில் குடியிருந்த சிங்கள இராணுவத்தினர் கண்மூடித்தனமாக மோட்டார் எறிகணைத் தாக்குதல்களை நடத்தி பொதுமக்கள் மத்தியில் உயிர்ச் சேதங்களை விளைவித்து வந்தனர். கோட்டைக்கு அருகிலுள்ள யாழ்ப்பாண மருத்துவமனையும் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகி வந்தது.

எனவே, கோட்டைத் தளத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்கான இராணுவ நலனும் அரசியல் நோக்கமும் விடுதலைப் புலிகளுக்கு இருக்கவே செய்தது. அந்த இலக்கை அடைவதில் அவர்கள் மிகவும் உறுதியாக இருந்தார்கள். ஆயினும், கோட்டைத் தளம் மீது நேரடியான வலிந்து தாக்குதலை நடத்துவதென்பது தற்கொலைக்கு ஒப்பானது.

ஏனென்றால், ஆழமான அகழிகளால் சூழப்பட்ட இந்தக் கோட்டை, எவரும் உள்ளே ஊடுருவ முடியாத பலம் பொருந்திய பாதுகாப்புக் கட்டமைப்பாக விளங்கியது. ஆகவேதான் கோட்டைத் தளத்தைச் சுற்றி முற்றுகையிட பிரபாகரன் முடிவெடுத்தார். முழுமையான போர் மூண்டு ஒருவார காலத்தின் பின்பு, 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் திகதி கோட்டை மீதான முற்றுகைச் சமர் தொடங்கியது.

விடுதலைப் புலிகளின் படையணிகள் கோட்டையைச் சூழ, பலம் பொருந்திய பாதுகாப்பு அரண்களை அமைத்து, முற்றுகையை இறுக்கின.

(16 ஆம் பக்கம் பார்க்க...)



தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட தளபதி கிட்டு தலைமையில் யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகைக்குட்படுத்தப்பட்டது. 1987 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இந்திய அமைதிகாக்கும் படை யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பிரவேசிக்கும் வரை இந்த முற்றுகையை இலங்கைப் படையினரால் முறியடிக்க முடியவேயில்லை.

(16 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir


# கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் அடிப்படையில் ஓ.பி.எஸ். – 12 எம்.எல்.ஏக்களைத் தகுதி நீக்குக!



## வழக்குத் தாக்கல் செய்தது தி.மு.க.

சென்னை,செப்.26

கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் உட்பட 12 எம்.எல்.ஏக்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தி.மு.க. சார்பில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

தினகரன் அணியில் இணைந்து, முதல்வருக்கு எதிராக ஆளுநரிடம் மனு கொடுத்த 18 எம்.எல்.ஏக்களும், கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் தகுதி நீக்கம் செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், தினகரன் அணியில் இணைந்த 18 எம்.எல்.ஏக்களும் தகுதி நீக்கம் செய்யப்படும் போது, தனி அணியாகப் பிரிந்து செயற்பட்ட ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் மீது அவைத் தலைவர் நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று அ.தி.மு.க. அம்மா அணியின் துணைப் பொதுச் செயலர் டி.டி.வி. தினகரன், தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் உள்ளிட்டோர் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இந்த நிலையில், இதே கருத்தை வலியுறுத்தி, ஓ. பன்னீர்செல்வம் உட்பட 12 எம்.எல்.ஏக்களை பதவி நீக்கம் செய்யக் கோரி தி.மு.க. கொறடா சக்ரபாணி, சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

அதில், தமிழக சட்டப் பேரவையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பின் போது முதல்வருக்கு எதிராக ஓ. பன்னீர்செல்வம் உட்பட 12 பேரும் வாக்களித்தனர். இது தொடர்பாக வெற்றிவேல், ரங்கசாமி உள்ளிட்ட எம்.எல்.ஏக்கள் அவைத் தலைவரிடம் மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் இல்லை.

எனவே, கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் கீழ் ஓ. பன்னீர்செல்வம் உட்பட 12 பேரையும் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இந்த மனுவை சென்னை உயர் நீதிமன்றம் அவசர வழக்காக நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள இருக்கின்றது.

(ப)

# பட்டாசு ஆலையில் பயங்கரத் தீ விபத்து!

## எட்டுப் பேர் உயிரிழப்பு



ராஞ்சி,செப்.26

ஜார்கண்ட் மாநிலம் குமார்துபியில் உள்ள பட்டாசு ஆலையில் நேற்று காலை ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி 8 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.

ஜார்கண்ட் மாநிலம் குமார்துபி பகுதியில் தனியார் பட்டாசு உற்பத்தி ஆலை செயற்பட்டு வருகின்றது. நேற்றுக் காலை ஆலையின் வெடிமருந்து சேமிப்பு கிடங்கு பகுதியில் திடீரென தீப்பிடித்தது. இந்தத் தீ வேகமாக மற்றப் பகுதிகளுக்கும் நொடிப் பொழுதில் பரவியது.

பட்டாசுகள் இருக்கும் பகுதியிலும் தீ பரவியதால் அப்பகுதியில் பெரும் சப்தத்துடன் வெடித்தன. இதனையடுத்து, தகவலறிந்து 5 வாகனங்களில் விரைந்து வந்த தீயணைப்பு படையினர் தீயை அணைத்தனர்.இந்த விபத்தில் ஆலையில் இருந்த 8 பேர் உடல் கருகி பலியாகினர் எனவும், 25 பேர் காயமடைந்தனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஐந்து நாள்கள் சுற்றுப்பயணம் கேரளாவில் ஷார்ஜா மன்னர்



திருவனந்தபுரம்,செப்.26

கேரளா மாநிலத்தில் ஐந்துநாள் சுற்றுப்பயணம் செய்வதற்காக வந்துள்ள ஷார்ஜா மன்னர் சுல்தான் பின் முஹம்மது அல்-காசிமி நேற்று திருவனந்தபுரம் வந்தடைந்தார்.

ஷார்ஜா நாட்டுக்கு கடந்த ஆண்டு சென்றிருந்த கேரள முதல் முதலமைச்சர் பினராயி விஜயன் அரசு விருந்தினராக தங்கள் மாநிலத்துக்கு வருமாறு ஷார்ஜா மன்னர் சுல்தான் பின் முஹம்மது அல்-காசிமிக்கு அழைப்பு விடுத்திருந்தார். அவரது அழைப்பின்பேரில் நேற்று கேரளாவுக்கு வந்த ஷார்ஜா மன்னரை திருவனந்தபுரம் விமான நிலையத்தில் முதலமைச்சர் பினராயி விஜயன் மற்றும் இதர மந்திரிகள், அரசு உயரதிகாரிகள் அன்புடன் வரவேற்றனர்.

சிவப்பு கம்பள வரவேற்புக்கு பின்னர் மாநில பொலிஸார் அளித்த அணிவகுப்பு மரியாதையையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

அவரது வருகை குறித்து தனது பேஸ்புக் பக்கத்தில் மகிழ்ச்சி தெரிவித்துள்ள பினராயி விஜயன், நான் ஷார்ஜாவுக்குச் சென்றிருந்த போது மன்னரின் விருந்தோம்பலும் அவர் கேரள மாநிலத்தவர்



களை பற்றி தெரிவித்த உயர்வான கருத்துகளும் இன்றளவும் பசுமையாக நினைவில் உள்ளன. அவரது வருகையால் ஷார்ஜாவுக்கும் கேரளாவுக்கும் இடையிலான நல்லுறவுகள் மேம்பாடு அடையும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆளுநர் மாளிகையில் இன்று 26ஆம் திகதி கோழிக்கோடு பல்கலைக்கழகத்தின் சார்பில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் ஷார்ஜா மன்னருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்படுகிறது.

எதிர்வரும் 28ஆம் திகதிவரை இங்கு தங்கியிருக்கும் அவர் வேறுசில நிகழ்ச்சிகளிலும் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# கடன் விவரங்களை காட்டி விவசாயிகள் போராட்டம்




புதுடில்லி,செப்.26

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும், நதிகளை இணைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் சார்பில் தமிழக விவசாயிகள் டில்லி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த போராட்டம் நேற்று 71ஆவது நாளை எட்டியது.

இதனையொட்டி விவசாயிகள் தங்களது கழுத்தில் அட்டைகளை தொங்கவிட்டு போராட்டம் நடத்தினர். அதில் அவர்கள் வங்கிகளில் பெற்ற கடன் விவரங்களும், நிலபுலன் உள்ளிட்ட விவரங்களும் எழுதப்பட்டு இருந்தன.

மேலும், தங்களது வங்கிக்கணக்கில் தலா 15 லட்சம் ரூபா செலுத்த வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்துபவர்கள் விவசாயிகள் அல்லர் என்று பலர் விமர்சனம் செய்தனர் எனவும், அவர்களுக்கு தாங்கள் விவசாயிகள்தான் என்பதை தெரியப்படுத்தவே கழுத்தில் அட்டைகளை தொங்கவிட்டோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# மியன்மார் கலவரத்தினால் 28 இந்துக்கள் படுகொலை!



## மியன்மார் இராணுவம் தெரிவிப்பு

யங்கூன்,செப்.26

ராகின் மாகாணத்தில் ரோகிங்யா முஸ்லிம்களுக்கும் புத்த மதத்தினருக்கும் இடையே ஏற்பட்ட கலவரத்தில் 28 இந்துக்களை ரோகிங்யா தீவிரவாதிகள் கொன்று புதைத்தனர் என மியன்மார் இராணுவம் தெரிவித்துள்ளது.

மியன்மாரில் ராகின் மாகாணத்தில் ரோகிங்யா முஸ்லிம்களுக்கும் புத்த மதத்தினருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக மாறியது. இதனால் அங்கு வன்முறை மற்றும் தீவைப்புச் சம்பவங்கள் நடந்தன.

ரோகிங்யா தீவிரவாதிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. இதனால், ராகின் மாகாணத்தில் இருந்து வெளியேறிய 4 லட்சத்து 30 ஆயிரம் ரோகிங்யா முஸ்லிம்கள் அண்டை நாடான பங்களாதேஷில் தஞ்சம் அடைந்துள்ளனர்.


இந்த நிலையில் கலவரம் நடந்த ராகின் மாகாணத்தில் 28 இந்துக்கள் கொன்று புதைக்கப்பட்டனர் என மியன்மார் இராணுவம் தெரிவித்துள்ளது.

அவர்கள் புதைக்கப்பட்ட 2 புதை குழிகளை யா பா கயா என்ற கிராமத்தில் இராணுவம் கண்டுபிடித்தது.

கொல்லப்பட்ட இந்துக்களில் 20 பெண்கள் 8 ஆண்களும் அடங்குவர். அவர்களில் 6 மற்றும் 10 வயது சிறுவர்களும் அடங்குவர். இவர்களை ரோகிங்யா தீவிரவாதிகள் கொன்று புதைத்தனர் என ராணுவ தளபதி ஓர் இணைய தளத்தில் தெரிவித்துள்ளார். (ப)



## பாம்புகளின் காதலனுக்கு பாம்பால் வந்த நிலை



பிரித்தானியாவில் செல்லமாக பாம்புகளை வளர்த்து வந்தவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவின் Hampshire பகுதியைச் சேர்ந்தவர் Dan Brandon (வயது 31). இவருக்கு பாம்புகள் என்றால் அலாதி பிரியம், தன்னுடைய வீட்டில் மலைப்பாம்புகளை வளர்த்து வந்தார்.

அவைகளுடன் ஜாலியாக விளையாடும் Dan Brandon, பேஸ்புக் பக்கத்திலும் புகைப்படங்களைபகிர்ந்துள்ளார். இந்த நிலையில் தன்னுடைய வீட்டில் Dan Brandon படுகாயமடைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவருக்கு அருகே பாம்பு ஒன்றும் இருந்துள்ளது, தனக்கு பசி எடுத்த போது உணவுக்காக அவரை கொத்தி கொன்றிருக்குமா என்ற நோக்கில் பொலிஸார் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர். மேலும் பிரேத பரிசோதனை அறிக்கை வெளிவந்த பின்னரே தெளிவான முடிவு கிடைக்கும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஜேர்மன் பொதுத் தேர்தல்: ஏஞ்சலா அபார வெற்றி

ஜேர்மன் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட ஏஞ்சலா மெர்கல், நான்காவது முறையாக வெற்றி பெற்று அதிபராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஜேர்மன் நாடாளுமன்றத்தில் மொத்தம் 598 உறுப்பினர்கள் உள்ளனர். கடந்த 2013ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் கட்சி 311 இடங்களில் வெற்றி பெற்று சமூக ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து கூட்டணி ஆட்சி அமைத்தது. ஏஞ்சலா மெர்கல் தொடர்ந்து மூன்றாவது முறை அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த அரசின் பதவிக்காலம் முடிய உள்ள நிலையில், அடுத்த அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான 19ஆவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. காலையில் தொடங்கிய வாக்குப்பதிவு மாலையில் நிறைவடைந்தது.

### நான்காவது முறையாகவும்



கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் சார்பில் போட்டியிட்ட ஏஞ்சலா மெர்கலும், சமூக ஜனநாயகக் கட்சி சார்பில் மார்டின் ஷூல்ஸ்சும் போட்டியிட்டனர். இவர்கள் தவிர இன்னும் ஐந்து பேர் தேர்தல் களத்தில் இருந்தனர்.

வாக்குப்பதிவுக்குப் பின்னர் நடத்திய கருத்துக்கணிப்பில் ஏஞ்சலா மெர்கல் மீண்டும் நான்காவது முறையாக அதிபராக பதவி ஏற்பார் எனத் தெரிய வந்தது.

இந்த நிலையில், கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் சார்பில் போட்டியிட்ட ஏஞ்சலா மெர்கல் 33.2 வீத வாக்குகள் பெற்றுச் சாதனை வெற்றி பெற்றார். அவரைத் தொடர்ந்து, சமூக ஜனநாயக கட்சி 20.8 வீத வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

## உலகின் ‘குண்டுப் பெண்’ மரணம்!



உலகின் குண்டான பெண்ணாக கருதப்படும் இமான் அகமது அபுதாபியில் உள்ள மருத்துவமனையில் மரணமடைந்துள்ளார். எகிப்து நாட்டைச் சேர்ந்தவர் இமான் அகமது (36), இவர் 500 கிலோ எடையுடன் உலகின் குண்டுப் பெண்ணாகத்திகழ்ந்து வந்தார். தனது உடல் எடையை குறைக்க சில மாதங்களுக்கு முன்னர் இந்தியா வந்த இமான் மும்பை தனியார் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்றார், பல்வேறு சிகிச்சைகளுக்குப் பின்னர் அவரின் எடை சிறிதளவு குறைந்து.

பின்னர் இந்தியாவிலிருந்து அபுதாபிக்குச் சென்ற இமான் அங்குள்ள தனியார் மருத்துவமனையில் தங்கி உடல் எடை குறைப்புக்காக சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில், சிகிச்சை பலனளிக்காமல் இமான் உயிரிழந்துள்ளார். கடந்த சில தினங்களாக சிறுநீரகம் மற்றும் இதயம் சம்பந்தமான கோளாறுகள் இமானுக்கு அதிகரித்த நிலையில் அவரின் உயிர் பிரிந்துள்ளது. அபுதாபி மருத்துவமனையில் 20 மருத்துவர்கள் இமானுக்கு சிகிச்சையளித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உதைபந்தாட்டம் வென்றது செந்தமிழ் கழகம்!





புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் இறுதி உதைபந்தாட்டப் போட்டியை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மின்னொளியில் சிறப்பாக நடத்தியது.

இந்தப் போட்டிக்கு முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வைத்தியருமான சி.சிவமோகன் கலந்து கொண்டார்.இந்த போட்டியில் உடுத்துறையைச் சேர்ந்த செந்தமிழ் விளையாட்டுக் கழகம் முதலாம் பரிசைப் பெற்றுக்கொண்டது.

# யாழ்ப்பாணக் கோட்டை...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கொட்டடி, காங்கேசன்துறை வீதி, முனியப்பர் வீதி, நூல்நிலைய வீதி, ஆங்காங்கே அரசகட்டடங்கள் போன்ற வற்றில் நிலைகொண்டிருந்த சுமார் 450 ஈழப்போராளிகளும் அவர்களால் கோட்டைச் சூழலில் விதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளும் இலங்கை இராணுவத்தினரை வெளியேறவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தன.

1984 - 85 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில்இலங்கைஇராணுவத்தினரை முகாம்களுக்குள் முடக்கும் முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டனர். இதன் ஒரு கட்டமாக கோட்டை, பலாலி முகாம்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர தொடர் முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணக் கோட்டையால் எண்ணிலடங்கா வேதனைகளையும் மன உளைச்சல்களையும் தமிழ் மக்கள் தொடர்ந்து அனுபவித்த காலம் அது.

1986ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி கோட்டையில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரை



வெளியேறக் கோரி வர்த்தகர்கள் கடையடைப்பு போராட்டங்களில் ஈடுபட்டனர். மாணவர்கள் குழுக்களாகச் சென்று கோட்டை வாயிலில் வைத்து மகஜர்களையும் கையளித்தனர்.

கோட்டை முகாமை அகற்றுவதே இனப்பிரச்சினைக்குநிரந்தரத்தீர்வாகும் என்ற கருத்தை வலியுறுத்தியும் கால நேரமின்றி மேற்கொள்ளும் ஷெல் வீச்சைச் சுட்டிக்காட்டியும் இரண்டு, லட்சம் மக்கள் கையெழுத்திட்டு கோரிக்கை ஒன்றையும் இலங்கை அரசிடம் விடுத்தனர். எனினும், எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை. ஆங்காங்கே இடம்பெற்ற தொடர் ஷெல் வீச்சுக்களால் யாழ்ப்பாணத்தில் உயிர்ப் பலிகள் சர்வ சாதாரணமாகிக் கொண்டிருந்தன.

மருத்துவமனை, பாடசாலைக் கட்டடங்கள், ஆலயங்களில், பொது இடங்கள் என்ற பேதமின்றி ஷெல் வீச்சுக்கள் ஓய்வின்றி நீடித்தன. உயிர் பலிகளும் தொடர்ந்தன.

இவ்வாறான நிலையில், முழு குடா நாட்டிலிருந்தும் இராணுவத்தினரை விரட்டியடிக்கும் திட்டம் கோட்டையைக் கைப்பற்றி விட்டால் சாத்தியமாகிவிடும் எனப் புலிகள் நம்பினர். இந்த எண்ணத்திலேயே 1990 ஆம் ஆண்டு யாழ். கோட்டை விடுதலைப்புலிகளின்முற்றுகைக்குள்ளானது.


இராணுவத்தினர் தொடர்ந்து ஷெல் தாக்குதல்களையும் வெகு தூரம் சென்று தாக்கும் ஆட்லறி ஷெல் தாக்குதல்களையும் அது மாத்திரமன்றி பொம்மர் குண்டு வீச்சு, விமானத் தாக்குதலையும் மேற்கொள்ள பதிலுக்கு புலிகள் ரொக்கட் தாக்குதல்களையும் மேற்கொள்ள கோட்டை சுற்று வட்டாரத்தில் வாழ்ந்த பலர் ஏதிலிகளாகினர்.

1618 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் யாழ்ப்பாணக் கோட்டையை அமைத்தனர். அதன் பின்னர் 1658 இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் இக்கோட்டையை மேலும் விஸ்தரித்துப் புனரமைத்தனர். 1990 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரிடமிருந்து இக்கோட்டையை விடுதலைப்புலிகள் மீட்கும் முயற்சியில் ஈடுபட்ட வேளையாழ். கோட்டை பெருஞ்சேதத்துக்குள்ளானதுடன் புராதன நினைவுச் சின்னங்களும் சேதமாகியமை குறிப்பிடத்தக்கது.

தற்போது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இக்கோட்டையைப் பாதுகாத்து உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாக மாற்றியமைக்கும் நோக்கில் இங்கு இப்போது புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டச்சு அரசாங்கத்தின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் இதன் புனரமைப்புப் பணிகளின் 60 சதவீதமான பணிகள் தற்போது நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. துரித கதியில் புனரமைக்கப்பட்டுவரும் யாழ்.கோட்டையின் நிர்மாணப்பணிகள் நிறைவடைந்தவுடன், அதனை நாட்டின் பிரத்தியேகமா கலாசார பொக்கிஷங்களில் ஒன்றாகவும், பாரம்பரியத் தளங்களில் ஒள்றாகவும் இணைத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# கோட்டையை கைப்பற்றிய வெற்றிச் சமர்!

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதனைத் தொடர்ந்து கோட்டைத் தளத்துக்குள் மோட்டார் எறிகணைகளும் ஏவப்பட்டன. முற்றுகையிடப்பட் டிருந்த சிங்களப் படையினருக்கு, ஹெலிக்கொப்டர்கள் மூலமாக விநியோகம் நடைபெறுவதைத் தடுக்கும் நோக்கில் 50 கலிபர் துப்பாக்கிகளையும் விடுதலைப் புலிகள், கோட்டைக்கு அருகில் நகர்த்தினர்.

இறுக்கமான முற்றுகைக்கு ஆளாகி, விநியோகம் துண்டிக்கப்பட்ட நிலையில், தொடர்ச்சியான மோட்டார் எறிகணைத் தாக்குதல்களுக்கும் ஆளாகிய சிங்களப் படையினர், பயங்கரமான உளவியல் நெருக்குவாரத்துக்கு இலக்காகினர்.கோட்டைத் தளம் விடுதலைப் புலிகளிடம் விழுவதை எப்படியாவது தடுக்கவேண்டும் என்று உறுதிபூண்டு நின்ற பிரேமதாசா, யாழ்ப்பாணம் மீது மிகக் கொடூரமான குண்டு வீச்சைக் கட்டவிழ்த்துவிட்டார்.

சிறிலங்கா விமானப் படையினர் வசமிருந்த சகல விதமான குண்டுவீச்சு விமானங்களும், இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்களும் அணிதிரட்டப்பட்டு இரவு, பகல் எனக் குண்டுமழை பொழியப்பட்டது. போதாக்குறைக்கு பலாலித் தளத்திலிருந்து பீரங்கி எறிகணைத் தாக்குதல்களும் தீவிரப்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில், கோட்டையை அண்டிய புலிகளின் நிலைகள் மீது நிகழ்த்தப்பட்ட விமான, பீரங்கிக் குண்டு வீச்சுக்கள் படிப்படியாக யாழ்ப்பாண நகரின் குடியிருப்புப் பகுதிகள் மீது விஸ்தரிக்கப்பட்டன. இந்தக் கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதல்களும் விமானக் குண்டு வீச்சுக்களும் யாழ்ப்பாண மக்கள்மீது பெரிய அளவில் உயிர்ச் சேதத்தை விளைவித்தன. அத்தோடு, ஆயிரக்கணக்கான வீடுகளையும் நாசப்படுத்தின. குண்டுத் தாக்குதல்களிலிருந்து தப்பிப் பிழைப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு அகதிகளாக இடம்பெயர்ந்தனர்.

கோட்டை முற்றுகைச் சமர் 107 நாள்கள் வரை நீடித்தது. இறுதியில் செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி, திலீபனின் நினைவு நாளன்று யாழ்ப்பாணக் கோட்டை விடுதலைப் புலிகளின் வசம் வீழ்ந்தது. கோட்டைத் தளத்துக்கு விநியோகம் முற்றாகத் துண்டிக்கப்பட்டதால் அங்கு முடங்கிக் கிடந்த படையினர் பசியால் செத்து மடியும் பயங்கர நிலைக்குத் தள்ளப்பட்டனர். இறுதியில் கோட்டைக்குப் பின்புறமாக அமைந்திருந்த நிலவறை ஊடாக பண்ணைக் கடல் வழியாக இந்தப் படையினர் மீட்டெடுக்கப்பட்டனர்.

நன்றி:'சுதந்திர வேட்கை'

# அரையிறுதிக்குள் நுழைந்தது பாடும்மீன்!

(கங்கா)

யாழின் கில்லாடி உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் புங்குடுதீவு நசரத் விளையாட்டுக்கழகத்தை 0:2 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தி, குருநகர் பாடும்மீன் அணி அரையிறுக்குள் நுழைந்தது.

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், யாழின் கில்லாடி என்னும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று கடந்த 10 ஆம் திகதி முதல் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 32 உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் ஏ,பி என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, போட்டிகள் நொக்கவுட் முறையில் நடைபெற்று வருகின்றன.



முதற்சுற்று மற்றும் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று முடிந்து 8 அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

குருநகர் பாடும்மீன், புங்குடுதீவு நசரத், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மயிலங்காடு ஞானமுருகன், குப்பிளான் குறிஞ்சிக்குமரன், இளவாலை ஹென்றியரசர், ஊரெழு றோயல் மற்றும் இளவாலை சென்.லூட்ஸ் அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

முதலாவது காலிறுதியாட்டம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது. இதில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரத் அணி மோதியது.

தொடக்கம் முதல் பாடும்மீன் அணியின் முழுமையான கட்டுப்பாட்டில் ஆட்டம் இருந்தது. இருந்தும், அவர்களால் அவற்றைக் கோலாக்க முடியவில்லை. முதற்பாதியில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் அடிக்கவில்லை.

இரண்டாவது பாதியின் 7 ஆவது நிமிடத்தில் பாடும்மீன் அணியின் ஜெ.சேயோன் முதல் கோலைப் பதிவு செய்தார். தொடர்ந்து இரண்டாம் பாதியின் 27 ஆவது நிமிடத்தில் பாடும்மீன் அணியின் டி.கீதன் கோல் ஒன்றை அடித்தார்.

முடிவில் பாடும்மீன் அணி 2:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.)

# டக் அவுட்டில் சாதனை படைத்த நிரோன் திக்வெல்ல

இலங்கை கிரிக்கெட் அணியின் தற்போதைய விக்கெட் காப்பாளரும், துடுப்பாட்ட வீரருமான நிரோஷன் திக்வெல்ல, சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அதிக இன்னிங்ஸுகளில் பூச்சிய ஓட்டம் (Ducks) பெறாமல் இருந்த முதலாவது வீரராக தன்னை பதிவு செய்து புதிய சாதனை படைத்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணிக்கு திக்வெல்ல அறிமுகமாயிருந்த போதும், அப்போது தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தை காட்டத் தவறியதனால் அணியில் தொடர்ந்து நீடித்திருக்கும் வாய்ப்பு அவருக்கு இல்லாது போயிருந்தது. மீண்டும் 2016ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் தனது துடுப்பாட்ட முறை மூலம் தேர்வாளர்களை தன்பக்கம் ஈர்த்த திக்வெல்ல, மூன்று வகைப் போட்டிகளிலும் இலங்கையின் நிரந்தரத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக மாறியுள்ளார்.

தற்போது டெஸ்ட், ஒரு நாள் மற்றும் ரி-20 ஆகிய 43 போட்டிகளில் பங்கேற்றுள்ள திக்வெல்ல இப்போட்டிகள் மூலம் இதுவரையில் 50 இன்னிங்ஸுகளில் பூச்சிய ஓட்டம் எதனையும் பெறாத வீரராக மாறியிருப்பதோடு, சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் வரலாற்றில் அதிக இன்னிங்ஸ்களில் பூச்சிய ஓட்டம் பெறாத வீரராகவும் மாறியிருக்கின்றார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அதிக இன்னிங்சுகள் பூச்சிய ஓட்டங்கள் பெறப்படாத சாதனை முன்னதாக இந்தியாவின் துடுப்பாட்ட வீரர் ப்ரிஜேஷ் பட்டேலினால் பெறப்பட்டிருந்தது. 1974 ஆம் ஆண்டு தொடக்கம் 1979 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிகளில் இந்தியாவுக்காக விளையாடியிருந்த பட்டேல் 31 போட்டிகளில் பங்கேற்று 47 இன்னிங்ஸுகளில் இந்த சாதனையை நிலைநாட்டியிருந்தார்.

மேலும், திக்வெல்ல விளையாடிய 50 இன்னிங்சுகளிலும் 11 அரைச் சதங்கள், 2 சதங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக 1,677 ஓட்டங்களினைக் குவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.



# ஊரெழு றோயல் அணி அரையிறுதிக்குள் நுழைவு



(கங்கா)

மிக நிதானமாக ஆடி, 1:2 என்ற கோல்கள் கணக்கில் இளவாலை சென்.லூட்ஸ் அணியை வீழ்த்தி ஊரெழு றோயல் அணி அரையிறுதிக்குள் நுழைந்தது.

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், யாழின் கில்லாடி என்னும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று கடந்த 10 ஆம் திகதி முதல் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

முதற்சுற்று மற்றும் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று முடிந்து 8 அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இரண்டாவது காலிறுதியாட்டத்தில், ஊரெழு றோயல் அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் அணி மோதியது.

போட்டி தொடங்கி இரண்டாவது நிமிடத்தில், ஊரெழு றோயல் அணிக்குப் பெனால்ட்டி வாய்ப்பொன்று கிடைத்தது. பெனால்ட்டி அடிப்பதில் தலைசிறந்தவரான றோயல் அணியின் எடிசன் அதனைக் கோலாக மாற்றினார்.

அதே உத்வேகத்துடன் ஆடிய றோயல் அணி 9 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலைப் போட்டது. அதனை நிதர்சன் அடித்தார். முதற்பாதியாட்டம் அந்த இரண்டு கோல்களுடன் முடிவடைந்தது.



இரண்டாவது பாதியாட்டத்தில் றோயல் அணி தடுப்பாட்டம் ஆடியது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய சென்.லூட்ஸ் அணி ஒருகோலைப்போட்டுபோட்டியை விறுவிறுப்படையச் செய்தது. எனினும், சுதாகரித்துக் கொண்ட றோயல், ஆட்டநேரம் முடியும் வரையிலும் முன்னிலையை தக்க வைத்தது.

முடிவில் றோயல் அணி 2:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக நிதர்சன் தெரிவுசெய்யப்பட்டார்.

## திருக்கேதீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக ஒன்றியத் தின் தலைவர் வி.எஸ்.சிவகரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு முகவரியிட்டு நேற்று கடிதம் ஒன்றை அனுப்பி வைத் துள்ளார்.

அக்கடிதத்தில் மேற்படி விகாரை வெள்ளியன்று திறந்து வைக்கப்படவிருப்பதாகக் கோடி காட்டப்பட்டுள்ளது.

'சட்டவிரோத பௌத்த விகா ரையை 29.09.20017 ஜனாதி பதிதிறக்கலாமா?' என்ற தலைப் பில் அமைந்த அந்தக்கடிதத் தின் முழு விவரம் வருமாறு:-

மன்னார் மாந்தை திருக் கேதீஸ்வரம் பகுதியில் தனி யாருக்கு சொந்தமான 10 ஏக்கர் காணியை அபகரித்து பௌத்த கோவில் அமைப்பதுதானா நல்லாட்சி? 1991 ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வரம் பகுதியை இரா ணுவம் அபகரித்த போது தமது வழிபாட்டுக்கு என அமைக்கப் பட்டதுதான் இந்த பௌத்த விகாரை. 2009 இற்கு பின்னர் இராணுவம் அங்கிருந்து பிர தான படை முகாமை அகற்றிய போதும், இந்தபௌத்தகோவிலை யும், பௌத்த மதகுருவையும் பாதுகாப்பதற்கு சிறிய இராணுவ முகாம் அமைத்துப் பேணி வரு கிறது.

எனவே இராணுவத்தின் ஒத்துழைப்புடனேயே பௌத்த விகாரை அமைப்பு நடைபெறு கின்றது. வரலாற்றுப் புகழ்மிக்க திருக்கேதீஸ்வரம் சூழலில் இச் செயற்பாடு ஏற்புடையதா? 18.01.2012 இல் பௌத்த மத அலுவல்கள் திணைக்களம் இந்த விகாரையின் பதிவை இரத்து செய்ததுடன் கட்டுமானப் பணி களையும் நிறுத்தியது. ஆனால் உங்கள் நல்லாட்சியில்தான் மீண்டும் பணிகள் தொடங்கப் பட்டன. இது சட்ட விரோத, ஜன நாயக மீறல் அல்லவா? இதுவா நல்லாட்சி? தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில் கலாசார மாற்றத்தை ஏற்படுத்தி, போலி யான புனைவுப் பெயர்களின் மூலம் பௌத்த மயமாக்கல் வேலைத்திட்டத்தை முன்னகர்த்து கிறீர்களா?

எப்படி கதிர்காமத்தை சிங்கள முருகன் ஆக்கினீர்களோ, அதே போல் காலப்போக்கில் திருக் தீஸ்வரத்தை சிங்கள சிவனாக் கும் பணியைத் தொடங்கியிருக் கிறீர்களா? இதுதானா பௌத்த தர்மம்? புத்த பெருமானின் தர்ம சிந்னைக்கு எதிராக செயற்படு வதுதான் இன்றைய பௌத்த சிந்தனையா? பாவம் புத்தர். உயிரோடு இருந்திருந்தால் உங் கள் எல்லோரையும் அழித்து விடுவார். புத்த பெருமானின் தர்ம சிந்தனைகள் உலக நீதிக்கு வழிகாட்டியது. ஆனால் இன்றைய பௌத்தம் இனச்சுத்தி கரிப்பு செய்கிறது.

சட்ட விரோதமாக தனியா ருக்கு சொந்தமான காணியில் அமைக்கப்பட்ட சட்ட விரோத மான விகாரையைத் திறப்பதற்கு தமிழ் மக்களின் வாக்குக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி யாகிய நீங்கள் உங்களைத் தெரிவு செய்த மக்களின் விருப் புக்கு மாறாக அதற்கான விழா விற்கு வருவது தார்மீக அடிப் படையில் நியாயம்தானா? ஏன் உங்கள் மனச் சாட்சியிடம் கேளுங்கள். தமிழ் மக்களின் அறம் சார்ந்த போராட்டத்தைத் தான் அடியோடு அழித்து விட்டீர் கள். இனம் சார்ந்த உணர்வை யும் நசுக்கிவிடப்போகிறீர்களா? நீங்கள் தமிழ் தலைமைகளை ஏமாற்றலாம்; ஆனால் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது. என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அவர்கள் உங்களை மன் னிக்க மாட்டார்கள். நீங்கள் உண் மையில் அறம் பேசுபவராக இருந்தால் சட்ட விரோத விகாரை திறப்பு விழாவிற்கு வருவது ஏற்புடையதுஅல்லஎனஉணர்ந்து உடனடியாக பணிகளை நிறுத்த வேண்டும். எக்காலத்திலும் பௌத் தர்கள் வசிக்காத இடத்தில் எதற்கு விகாரை? திருக்கேதீஸ்வரப் பகுதி யில் தொல்லியல் திணைக்களத் தின் அனுமதியின்றி ஒரு சிறு குழியைக்கூட அகழ முடியாது. ஆனால் விகாரை கட்டுவதற்கு யார் அனுமதித்தது? இதுதானா பௌத்தசனநாயகம்? மேட்டிமை வாத மேலாதிக்கத்தைத் தான்தோன்றித்தனமாக தமிழர் பிரதேசத்தில் இராணுவ உத வியுடன்செயற்படுத்திக்கொண்டு உலகத்தை ஏமாற்ற உதட்டளவு நல்லிணக்கம் பேசுகிறீர்களே! எப்படி நல்லிணக்கம் ஏற்படும்?

எனவே, இந்தச் சட்ட விரோத விகாரை திறப்பு விழாவில் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட நீங்கள் கலந்து கொள்வது ஏற்புடையது அல்ல. எமது நியாயபூர்வமான வேண் டுகையை புறக்கணித்து, குறித்த திறப்புவிழா நடைபெற்றால் ஜன நாயக ரீதியில் கறுப்பு கொடி ஏந்தி முற்றுகையிட்டு, போராட் டம் நடத்துவோம் என்பதையும் தங்களிற்கு விநயமாகத் தெரி வித்துக் கொள்கின்றோம்.- என்று உள்ளது. (உ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் பலதடவைகள் முயற்சித்தனர் என்றும் -

எனினும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரைமீறி, அமை ச்சின் செயலாளர் பழிவாங்கலை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றமையால் இப் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு காணமுடியாமல் இருக்கின்றது என்றும் -

பொதுச் சுகாதார பரிசோதகர் தரப்பில் குற்றம் சுமத்தப்படுகின் றது.

இந்தப் போக்குக்கு ஆட்சேப மும் எதிர்ப்பும் தெரிவிக்கும் விதத்தில் நேற்றும் இன்றும் தாங் கள் அடையாள சுகவீன லீவுப் போராட்டத்தில் குதித்துள்ளனர் எனபொதுச்சுகாதாரப்பரிசோதகர் கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இதற்கிடையில் -

இந்த விவகாரத்தில் தாதியர், மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள், மருத்தா ளர்கள், கதிர்ப்படவியலாளர்கள் போன்ற பத்துக்கு மேற்பட்ட இணைந்த மருத்துவ சேவைத் தொழிற்சங்கங்களும் நேரடியாக சம்பந்தப்படத் தயாராகி வருகின் றன என்று தெரிகின்றது.

இந்தத்தரப்புகளுடன்பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கப் பிரதிநிதிகள் பேச்சு நடத்திய மையைஅடுத்து, இந்தஇணைந்த மருத்துவர் சேவை சங்கத்தின் பிரதிநிதிகள் நாளை மறுதினம் யாழ். வருகின்றார்கள் எனத் தெரிய வருகின்றது.

அன்றையதினம்பொதுமண் டபம் ஒன்றில் ஒன்றுகூடி இவ்விட யம் குறித்து ஆராயும் அப்பிரதி நிதிகள் இந்த ஐந்து ஊழியர்கள் தொடர்பிலும் சரியான தீர்வு கிட்டுவதை உறுதிப்படுத்து வதற்காக இணைந்த மருத்துவ சேவையை தேசிய ரீதியில் ஸ்தம்பிக்கச் செய்யும் நடவடிக் கைக்கும் தயாராவார்கள் என்று கூறப்பட்டது.

இதற்கிடையில் -

நேற்றும் இன்றும் பொதுச் சுகாதாரப்பரிசோதகர்கள் சுகவீன லீவுப் போராட்டத்தில் குதித்தமை யால் டெங்கு சோதனை நடவடிக் கைகளும் பெரிதும் பாதிக்கப் பட்டன என்று களத் தகவல்கள் தெரிவித்தன. (உ)

## ஜெனீவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மு.க. தலைமையகம் நேற்று தனது செய்திக் குறிப்பில் தெரி வித்தது.

நேற்று மனித உரிமைகள் கவுன்சிலின் பிரதான அரங் கத்தில் ம.தி.மு.க. பொதுச் செய லாளர் வைகோ இரண்டு தட வைகள் பேசினார்.

சுமார் பதினைந்து நிமிட இடைவெளியில் இரண்டு தட வைகள் அரங்குக்குள் பேசு வதற்கு அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது.

இரண்டாவது உரை முடிவுற் றதும் குர்திஸ்தான் பிரதிநிதி உட்படப் பலரும் வைகோவுக்குக் கைகொடுத்தும் பாராட்டினர்.

ஆனால், இந்த உரையை முடித்துவிட்டு இரண்டு எட்டு நடப்பதற்குள் சிங்களவர்கள் ஆறேழு பேர் வைகோவைச் சூழ்ந்து கொண்டார்கள். அதில் ஒரு பெண்மணி, "நீ இலங்கைப் பிரஜை இல்லையே? நீ இலங் கையைப் பற்றி எப்படிப் பேச லாம்?" என்று கேட்டார்.

உடனே வைகோ பொறுமை யாக, "நீங்கள் யார்? இலங்கை யைச் சேர்ந்தவரா? நீங்கள் சிங்களப்பெண்மணியா?" என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெண்மணி ஆமாம் என்றார்.

"நான் தமிழ்நாட்டைச் சேர்ந் தவன். எங்களுக்கும் ஈழத் தமி ழர்களுக்கும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தொப்புள்கொடி இரத்த உறவு இருக்கின்றது. எனக்குப் பேச உரிமை உண்டு" என்றார் வைகோ.

அதற்குள் அவரைச் சூழ்ந்து கொண்ட சிங்களவர்கள், "விடுதலைப்புலிகள் கொடூர மானகொலைகாரர்கள். அக்கிரமக் காரர்கள். அவர்களை ஆதரித்து நீஎப்படிப்பேசலாம்?" என்றார்கள்.

"இலட்சக்கணக்கான தமிழர் களை நீங்கள் கொன்றீர்கள். எங்கள் தாய்மார்கள், சகோதரி களைக் கற்பழித்துக் கொன் றீர்கள்.

எங்கள் பச்சைக் குழந்தை களைக் கொன்றீர்கள். நீங்கள் கொலைகாரப் பாவிகள்." - என் றார் வைகோ.

இப்படிச் சூழ்ந்துகொண்டு வைகோவிடம் தகராறு செய்த சிங்களவர்களுள் போர்க்குற்றங் களில் ஈடுபட்ட முன்னாள் இராணுவத்தினர்தான் பெரும் பான்மையாக இருந்தார்கள். அவர்கள் 35 பேர் வந்து இருந் தார்கள்.

அந்தப்பெண்மணி வைகோ வுடன் தகராறு செய்கின்ற மை யை மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு உள்ளேயே சிலர் வீடியோ எடுத்தார்கள்.

அவ்வாறு யாரும் அங்கே எடுக்கக் கூடாது. இதன்மூலம் அவர்கள் திட்டமிட்டு வைகோவை மனித உரிமைகள் கவுன்ஸி லுக்குள் வரவிடாமல் தடுக்கச் செய்கின்ற சதி இது என்று ஈழத்தமிழர்கள் கூறினார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை அன்றே வைகோவை அடை யாளம் காட்டிச் சிங்களவர்கள் சிலர் பேசிக்கொண்டு இருந் தார்கள்.

வைகோவின் பாதுகாப்பு குறித்து ஈழத்தமிழர்கள் கவ லைப்படுகின்றார்கள்.

- இப்படி அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டிருந்தது.

## 3 தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸன், நாவலப்பிட்டியைச் சேர்ந்த கணேசன் தர்சன் ஆகியோர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக கடந்த 5 வருடங்களாக வவுனியா நீதிமன்றில் வழக்கு நடந்து வரு கிறது.

இந்நிலையில் இந்த வழக்கை அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற் றுமாறு சட்டமா அதிபர் திணைக் களத்தினால் தெரிவிக்கப்பட்டுள் ளது. இதனைக்கண்டித்தும், தமிழ் மொழிபேசும் நீதிமன்றங்களுக்கு தமது வழக்கை மாற்றும் செய்ய வேண்டும் எனக் கோரியும் இவர் கள் உணவு தவிர்ப்புப் போராட் டத்தை ஆரம்பித்துள்ளனர்.

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

இடைக்கால அறிக்கை தொடர் பில் ஆராய்ந்து அவற்றில் இருக் கக்கூடிய விடயங்களை மக் களுக்குத் தெளிவுபடுத்தும் அதே நேரம் அதற்கு முன்னோடியாக பொது அமைப்புக்களைக் கூட்டி நிலைமையை விளக்குவதற் கான ஏற்பாடுகள் நடப்பதாகவும் பேரவைத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

அந்த அறிக்கை குறித்து பேரவையின் இணைத் தலை வர்களுள் ஒருவரான முதலமைச் சர் சி.வீ.விக்னேஸ்வரன் காட்ட மான கருத்துகளை வெளியிட் டுள்ள நிலையிலேயே பேரவை இவ்விடயம் குறித்து கூடி ஆராய்ந்து மக்களுக்குக் கருத்துக் களைத் தெளிவுபடுத்த முடிவு செய் திருக்கின்றது. (உ)

## தியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திலீபன் வீரச்சாவடைந்த நேரமான காலை 10.58 மணிக்கு தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் ஏற்பாட்டில் நல்லூரில் திலீபனின் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதேநேரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் ஏற்பாடு செய்துள்ள நினைவேந்தல் நிகழ்வு அதே நினைவு தூபிப் பகுதியில் இன்று மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதேவேளை தமிழர் தாயகப் பிரதேசங்கள் எங்கும் இன்று திலீ பன் நினைவேந்தல் நிகழ்வுகளும் அஞ்சலிக் கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன என எமது பிரதேச செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர். (உ)

## ஒரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு குற்றம் இழைக்கப்பட்ட வேளையில் இருந்து மேல் நீதி மன்றத்தில் குற்றப் பத்திரம் தாக் கல் செய்யப்படுவதற்குதற்போது சராசரியாக நான்கு வருடங்க ளும் ஏழு மாதங்களும் பிடிக்கின் றது.

குற்றப்பத்திரம் தாக்கல் செய் யப்பட்ட வேளையில் இருந்து வழக்கு விசாரணை ஆரம்பிப்ப தற்கு சராசரியாக மூன்று வரு டங்களும் ஏழு மாதங்களும் செல்கின்றன.

விசாரணை தொடங்கியதி லிருந்து தீர்ப்பளிப்படுவது வரை சராசரியாக ஒரு வருடமும் எட்டு மாதங்களும் கடக்கின்றன.

ஆக, ஒரு குற்றம் இழைக்கப் பட்டதிலிருந்து மேல் நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை சராசரியாகப் பத்து வருடங்களும் இரண்டு மாதங்களும் கடந்துவிடுகின்றன.

மேலும் வழமையாக மேன் முறையீட்டு நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் இரண்டு மேன்முறையீடுகள் முடிவதற்கு சராசரியாக ஏழு வருடங்கள் செல் கின்றன.

எனவே, ஒரு குற்றம் இழைக் கப்பட்டு அது பற்றிய பிணக்கு நிரந்தரமாக பூர்த்தியடைவதற்கு சராசரியாக 17 வருடங்கள் செல் கின்றன என்று அந்த ஆய் வறிக்கை தெரிவிக்கின்றது. (உ)

## பெரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தியாளர்கள் தமது விளைச்சலைச் சந்தைப்படுத்து வதில் எதிர்கொள்ளும் நெருக் கடிகளைக் கவனத்தில் கொண்டே ஜனாதிபதி இந்த உத்தரவை விடுத்திருக்கின்றார் எனக் கூறப் பட்டது. (உ)

## ஜெயலலிதா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற நீதியரசர் ஆறுமுகசாமி தலைமையில் விசாரணை ஆணையம் ஒன்றைத் தமிழக அரசு நேற்று நியமித்து அரசாணை வெளி யிட்டது.

ஜெயலலிதா கடந்த ஆண்டு செப்ரெம்பர் 22 ஆம் திகதி உடல் நலக்குறைவினால் சென்னை அப்பலோ மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். டிசெம்பர் 5 ஆம் திகதி அங்கு காலமானார்.

அவரது மரணம் குறித்து சந் தேகங்களும், கேள்விகளும் எழுந்த நிலையில் - பல்வேறு சர்ச்சைகளின் பின்னர் - இந்த மரணம் குறித்து விசாரிப்பதற்கு நேற்று விசாரணை ஆணை யத்தை தமிழக அரசு நியமித்துள் ளது. (உ)

## அமெ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா.பொதுச் செயலாளர் அந்தோனியா குட்டேரஸ் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் ஏற்பாடு செய்தி ருந்த விருந்துபசாரங்களில் பங்குபற்றிய இலங்கை ஜனாதி பதி, அங்கு ஐ.நா. மனித உரிமை கள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன், பாகிஸ்தான் பிரதமர் அப்பாஸி, நேபாளப் பிரதமர் பஹுனதுர் சியாபா உட்படப் பல தலைவர்களுடனும் பேச்சு நடத்தி யிருந்தார்.

கடந்த 17 ஆம் திகதி ஞாயிறன்று கொழும்பிலிருந்து புறப்பட்ட அவர் நேற்று 25 ஆம் திகதி நாடு திரும்பினார். (உ)

## சிரேஷ்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனவரி 5 ஆம் திகதி - ஜனாதி பதித் தேர்தல் சமயம் - கஹவத்த பகுதியில் ஐ.தே.கட்சி ஆதரவா ளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை களின் போது சில விடயங்களை மறைத்தார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பிலேயே அவர் தற்போது கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

விசேட புலனாய்வுப் பிரிவுக்கு நேற்றுக் காலை வாக்குமூலம் அளிப்பதற்கு அழைக்கப்பட்ட அவர், மேற்படி சூட்டுச் சம்பவம் தொர்பில் பிரதான சந்தேக நப ருக்கு சாதகமாக சில சாட்சியங் களை மறைத்தார் என்ற குற்றச்சாட் டில் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

மேற்படி சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பிரதிய மைச்சர் பிரேமலால் ஜயசேகரா, சப்பிரகமுவ மாகாண சபை உறுப் பினர் அருண நிலாந்த, கஹவத்த பிரதேச சபைத் தலைவர் வஜிர தர்ஷன ஆகியோர் கைது செய்யப் பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

நேற்றுக் கைது செய்யப்பட்ட லலித் ஜயசிங்க நேற்று பெல் மதுளை நீதிமன்றத்தில் முன் னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடப்பட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir



# பௌத்தத்தின் வளர்ச்சிக்கு காரணம் இந்து மதம்தான்!

## எல்லா சமயங்களையும் பேணுவோம் என்கிறார் அமைச்சர் விஜயமுனி

கொழும்பு, செப்.26

புதிய அரசமைப்பில்பௌத்த மதத்திற்கு முதலிடம் கொடுத்து பௌத்த மதத்தைக் காப்போம். அதுபோன்று ஏனைய மதங்களுக்கும் பாதுகாப்பும் மதங்களைப்போதிப்பதற்கான உத்தர வாதத்தையும் வழங்குவோம். -இவ்வாறு நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.

மத்தியநீர்ப்பாசனத்திணைக்களத்தின் 65 கோடி ரூபா ஒதுக்கீட்டில் மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் அமைக்கப்படவுள்ள கிரான்புல்சேனை அணைக் கட்டுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அமைச்சர் உரையாற்றுகையில்-

நாட்டில் வாழும் மக்கள் அனைவருக்குமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க உள்ளார்.

அரசமைப்புச்சட்டம்கொண்டு வருவதில் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஆகியோருக்குப் பங்களிப்பு உள்ளது. இவர்கள் மூவரும் இருக்கும் போது நாட்டுக்குப் பொருத்தமான அரசமைப்பு உருவாக்கப் படவேண்டும்.

கௌதம புத்தர் இந்தியாவிலிருந்து பௌத்த மதத்தைக் கொண்டுவந்தார். கணபதி, முருகன்உட்பட அனைத்துத் தெய்வங்களையும் சிங்களவர் களும்தமிழர்களும்வணங்குகின்றோம்.

பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமே இந்து மதமாகும்.



1918ஆம் ஆண்டு வெல்லஸ பகுதியில் வெள்ளையருடன் யுத்தம் நடைபெற்றபோது அவர்களுக்குப் பயந்து சிங்கள மக்கள் கிழக்கு மாகாணத்தில் தஞ்சம் புகுந்தனர். பாதுகாப்புக்காக எங்களுடைய சிங்கள மக்கள்தமிழ், முஸ்லிம்பெயர்களை இணைத்துக்கொண்ட னர்.

நாட்டில் சகல மக்களும் கலந்துவாழ வேண்டும். அனைவரும் அனைத்துப் பண்டிகைகளையும் கொண்டாட வேண்டும். நாட்டில் உள்ள மக்களின் பல்தரப்பட்ட கலாசாரங்களால் அவரவர்களது தனித்துவம் பேணப்படுகிறது.

இங்குள்ளதமிழர்கள்போன்று மலையகத்தில்உள்ளதமிழர்கள் இந்தியாவிலிருந்து வந்தாலும் நாட்டின்பொருளாதாரத்தில்பெரிய பங்களிப்பைச் செய்கிறார்கள்.

முஸ்லிம்கள் இந்தநாட்டுக்கு வரும்போது மனைவிகளை அழைத்து வரவில்லை. அவர்கள் இங்கிருந்த சிங்கள மற்றும் தமிழ் சகோதரிகளையே மணந்துகொண்டனர்.

கிரான்புல்சேனைத் திட்டத்திற்குயாரும்எதிர்ப்புத்தெரிவிக்கவில்லை அனைத்து விவசாயிகளும் இதனால் பயனடைய வேண்டும்.

இந்த மக்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தவர்கள். மக்களுக்குச் சேவை செய்வதன் ஊடாக நல்லிணக்கத்தைக் கொண்டு வரவேண்டும் என ஜனாதிபதி விரும்புகிறார்.

நான் சிறுவனாக இருக்கும் போது முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுடன் மட்டக்களப்பிற்கு வரும்போது 122 தோரணங்கள் அமைத்து அவர்களை வரவேற்றனர்.

1989 ஆம் ஆண்டுநாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும்போது-ஜே.வி.பிக்குஒளிந்து இருக்கும் போது- தற்போது மாகாணசபை உறுப்பினராக இருக்கின்ற கோவிந்தன் கருணாகரம், மாவை சேனாதிராஜா, ஜோசப் பராராஜசிங்கம் போன்றோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக எங்களுடன் இருந்தார்கள்.

பயங்கரவாத யுத்தத்திலிருந்து தப்பி நாங்கள் உயிருடன் இருக்கின்றோம். என்னுடன் இருந்த பலர் இன்று உயிருடன் இல்லை. 30வருட யுத்தத்தில் என்னநடந்தது? ஏன் நாங்கள் சண்டையிட்டோம்? தற்போது நாடு ஒரு சமாதான சூழ்நிலையில் உள்ளது. தற்போது நாட்டின் சகல பகுதிகளிலும் சுதந்திரமாக செல்லக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. - என்றர் அமைச்சர். (உ)

# தமிழ் மக்களுக்காக....

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மனித நேயத்தையும், அதன் தாற்பரியங்களையும் மதிக்கும் ஒரு வைத்திய சேவையாளன் என்ற நிலையைத் திலீபன் விடயத்தில் நிறைவேற்றவிடாமல் என் கைகளைக் கட்டிப் போட்டது எது?

வேறு வழியின்றித் தவித்தேன்.

எது?ஆம்.

'சத்தியம்' என்ற இந்த ஐந்து எழுத்துக்களுக்காகத் தானே திலீபன், 'அஹிம்சை' என்ற நான்கு எழுத்துக்களைக் கொண்ட போராட்டக் களத்தில் குதித்தான். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று உயரிய அம்சங்களால் வேரூன்றி வளர்த்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதால், 'கட்டுப்பாடு' என்ற நல்வழியிலே கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காகத் திலீபனை என் கண்ணெதிரிலேயே பலி கொடுப்பதைத் தவிர, வேறு வழியொன்றும் எனக்குத் தெரியவில்லை.

என் கடமையைச் செய்வதற்காக மேடையின் பின்பக்கம் இறங்கிச் செல்கிறேன். அங்கே பிரதித் தலைவர் மாத்தையா நிற்கிறார். அவரிடம் திலீபனின் உடல் நிலையின் அபாயகரத்தைப் பற்றி எடுத்துரைக்கிறேன்.

திலீபனின் உடல் நிலை மோசமாகிவிட்ட விடயம் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் பரவத் தொடங்கியது. விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும், பொதுமக்களும் மேடையைச் சுற்றிவளைத்துக் கொண்டனர். திலீபனுக்குக்கடைசிநிமிடம்வரையும் ஒருவித சிகிச்சையும் அளிக்க முடியாமல் எமது கைகள் கட்டப்பட்டிருந்தமைக்கு வேறு முக்கிய காரணமும் ஒன்று இருந்தது. எமது காதில் விழக்கூடியதாகவே பல எதிரணி உறுப்பினர்களும், எமது இயக்கத்துக்கு எதிரானவர்களும் பேசியமையைக் காதால் கேட்டவர்களில் நானும் ஒருவன்.

### சிலரின் விதண்டாவாதம்



புலிகள் தந்திரமாக மக்கள் மனத்தை மாற்றுவதற்காக உண்ணாவிரதம் என்ற பெயரிலே தண்ணியைக் குடிச்சுக்கொண்டு இருப்பார்கள். யார் இதைக்காணப்போகினம்? கடைசியில் 5 தீர்மானங்களும் நிறைவேறுமட்டும் வைத்தியம் செய்து ஆளைச் சாகவிட மாட்டினம். இதுதான் இந்த சாகும்வரை நீர் அருந்தாமல் உண்ணாவிரதம் இருப்பதன் உண்மை.

இப்படியான பேச்சுக்களுக்கு உண்மை வடிவம் கொடுத்து, புலிகள் பொய்யர்கள் என்ற கெட்ட பெயரை வரவிடாமல் காப்பாற்றுவதற்காகவும் எம் கைகள் கட்டப்பட்டிருந்தனவே தவிர வேறு ஒன்றுக்காகவும் அல்ல.

எமது கைகள் மட்டும் கட்டப்படாமல் இருந்திருந்தால், எமது உயிரினும் மேலான, தியாக தீபம் திலீபனை எமது உயிர்களைக் கொடுத்தாவது காப்பாற்றியிருப்போம். ஆனால், முடியவில்லையே? விதி! தன் வலிய கரங்களை மிக நன்றாகவே திலீபனின் கழுத்தில் இறுக்கிவிட்டான்.

உயிருடன் அந்த மனிதத் தெய்வம் நீண்ட நேரம் போராடிக் கொண்டிருக்கின்றமை என் கண்களால் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டமைக்காக நான் வெட்கப்பட்டேன்; வேதனைப் பட்டேன். ஆனால், என்ன செய்ய முடியும்?

265 மணித்தியாலங்கள் தனது சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்த அந்தத் தியாகத் திலீபன், இன்று காலை (26.09.1987) 10.48 மணியளவில், எம்மையெல்லாம் இந்த உலகில் பரிதவிக்க விட்டு விட்டுத்தான் மட்டும் போய் விட்டான்.

### தமிழர் தம் விளக்கு அணைந்து விட்டது!

ஆம், தமிழர்தம் விளக்கு அணைந்து விட்டது! அணைந்தே விட்டது! வைத்தியர் சிவகுமார் அவர்கள், திலீபன் இறந்த பின் அவரைப் பரிசோதனை செய்து தனது இறுதியான முடிவைச் சொல்லிவிட்டு, திலீபனின் பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்தார். அப்போது, மக்கள் கதறி அழத் தொடங்கினர்?

எங்கும் அழுகைச் சத்தம். விம்மல் ஒலி. சோக இசை. வானமே இடிந்து விட்டதைப் போன்ற வேதனை எல்லோரையும் ஆக்கிரமித்திருந்தது. வானத்து நிலவு கீழே விழுந்து விட்டது போன்ற உணர்வு! காலை 11 மணிக்கு 'இன்போம்' செய்வதற்காக, அவரது உடலை யாழ். வைத்தியக் கல்லூரிக்கு எடுத்துச் சென்றோம்.

மாலை 4.15 மணியளவில் திரும்பவும் அதே மேடைக்கு முன்பாக அவரின் புகழுடம்பு பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் புள்ளி போட்ட, பச்சையும், கறுப்பும் கலந்த இராணுவ உடையும், தொப்பியும் திலீபனுக்கு அணியப்பட்டு, 'லெப்டினனட் கேணல்' என்ற பட்டமும் அவருக்கு வழங்கப்பட்டது. அவர் செய்த தியாகத்துக்கு அவருக்கு எந்தப் பட்டமும் தகுதியில்லை, அல்லது ஈடாகாது என்பது எமக்குத் தெரியும். ஆனால், என்ன செய்ய முடியும்?

அவரைப் படுக்க வைத்திருந்த பேழையை, விடுதலைப்புலிகளின் சிவப்பு நிறத்திலான கொடி அலங்கரித்திருந்தது. தந்தை, சகோதரங்கள், உறவினர்கள் ஆகியோர் உடலை வந்து தரிசித்துச் சென்றனர்.

### தந்தையும் கதறினர்; மக்களும் கதறினர்!

பெட்டியைத் திறந்ததுமே அவரது அன்புத் தந்தையும், ஓய்வுபெற்ற ஆசிரியருமான, திரு. இராசையா அவர்கள் 'ஓ...' என்று அலறியவாறு அவர் உடல்மீது விழுந்து புரண்டு தவழ்ந்தார். அவரின் அழுகையைத் தொடர்ந்து பொதுமக்களும், சிறு பிள்ளைகளைப் போல் குலுங்கிக் குலுங்கி அழுத காட்சி நெஞ்சை நெருடியது.

பொதுமக்கள் மணிக்கணக்காகக் காத்திருந்து, நீண்ட வரிசையிலே வந்து தமது இறுதி அஞ்சலியை மண்ணின் மைந்தனுக்குச் செலுத்தினர்.

ஈரோஸ் இயக்கத் தலைவர் திரு. பாலகுமார், தமிழகத்திலிருந்து வருகைதந்து தமிழ்நாடு, காமராஜர் காங்கிரஸ் தலைவர்திரு. நெடுமாறன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் கலங்கி அழுதவாறு தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

தலைவர் பிரபாகரன், சொர்ணம், குமரப்பா, புலேந்திரன், சந்தோசம், ஜொனி, பிரபா, இம்ரான், அன்ரன் மாஸ்ரர், சங்கர் அண்ணா, நடேசன் மற்றும் ஏனைய இயக்க உறுப்பினர்களும் தத்தம் இறுதி அஞ்சலியைத் தமது தோழனுக்குச் செலுத்தினர்.

சாஜகான், நரேன், அருணா, சிறி, ராஜன், தினேஸ் போன்றோர் தம்மைச் சமாளிக்க முடியாமல் விம்மி விம்மி அழுதனர்.

திலீபனின் தியாகப் பயணத்தில் 12 நாள்கள் அவரின் கூட இருந்து, அவரின் போராட்டத்தில் பங்குபற்றி, வேதனையின் எல்லைக்கே சென்று வந்த எனக்கு, இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு இன்னும் எத்தனை நாள்கள் தேவையோ நானறியேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்!

திலீபனின் உயிர் அநியாயமாகப் போகவில்லை. அதற்குப் பதிலாக அவர் ஒரு படிப்பினையை எமக்குக் கற்பித்து விட்டுப் போயுள்ளார். அஹிம்சைப் போராட்டம் என்பது மனித நேயமும், உயர் பண்பும் மிக்கவர்களிடம் தான் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். ஆயுதங்கள் தான் எமது தமிழீழப் போராட்டத்தைப் பொறுத்த வரை சரியான பதில் தரமுடியும் என்பதையும், திலீபன் மறைமுகமாக உணர்த்திவிட்டுப் போயிருக்கிறார் என்பதே எமது கணிப்பு. அந்தத் தியாக தீபத்தின் இலட்சியங்கள் நிறைவேற, எம்மை நாம் அர்ப்பணிப்போமாக!

காலைக்கதிர் Kalaikkathir



# பிரிட்டிஷ் பிரதமரின் இல்லம் முன்பாக ஈழ உணர்வாளர்கள் சனியன்று போராட்டம்





தியாக தீபம் திலீபன் சாகும் வரையிலான உணவுத்தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வீரச்சாவடைந்த 30 ஆவது ஆண்டுநினைவாக, அடையாள உணவுத் தவிர்ப்புப் போராட்டத்திலும், இரத்ததான நிகழ்விலும் ஈழ உணர்வாளர்கள் பங்கேற்றுள்ளனர்.

சிறிலங்கா சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகளை நிபந்தனை இன்றி விடுவிக்க வலியுறுத்தியும், காணாமல் போகச் செய்யப்பட்டோர் தொடர்பாக நீதி விசாரணை மேற்கொள்ள வலியுறுத்தியும் அடையாள உணவுத் தவிர்ப்புப் போராட்டமும் கொட்டொலிப்போராட்டமும் பிரித்தானியத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் பிரித்தானியாவின் பிரதமரின் இல்லமான இலக்கம் 10, Downing Street முன்பாக கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரத்ததான நிகழ்விலும் ஈடுபட்டனர். இதில் ஈழ உணர்வாளர்கள் பலரும் கலந்து கொண்டு தியாகதீபம் திலீபன் நினைவு நாளை அனுஷ்டித்தமையுடன் குருதிக் கொடையிலும் ஈடுபட்டனர். (இ-100)

# கச்சாயில் கோஷ்டி மோதல்; இளைஞருக்கு வாள்வெட்டு

சாவகச்சேரி, செப்.26


கொடிகாமம் – கச்சாய்பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் இரு இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் வாள் வெட்டு க்கு ஆளாகியுள்ளார். இச் சம்பவம் கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

கச்சாய் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ-21)

# மன்னாரில் எரிந்த நிலையில் மீனவர் சடலமாக மீட்பு!

## கேதீஸ்வரம் பற்றைக் காட்டில்





மன்னார் தாழ்வுப்பாடு கிராமத்தில் வீட்டிலிருந்து நேற்றுமுன்தினம் புறப்பட்ட பின்னர் காணாமல் போனவர் நேற்று மன்னார் பகுதியில் திருக்கேதீஸ்வரம் கிராம அலுவலக பிரிவிலுள்ள திருக்கேதீஸ்வரம் கடற்படை முகாமுக்கும் தள்ளாடி இராணுவப்படை முகாமுக்கும் இடையிலுள்ள காட்டுப்பகுதியில் அரைகுறையாக எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

மன்னார் திருக்கேதீஸ்வரம் கிராம அலுவலகர் பிரிவில் பற்றைகள் உள்ள காட்டுப்பகுதிக்குள் சடலம் ஒன்று எரிந்த நிலையில் கிடப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து இறந்தவர் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருபவை வருமாறு:-

இப்பகுதியில் ஆணின் சடலம் ஒன்று எரிந்த நிலையில் கிடப்பதாக அருகாமையிலுள்ள பாதுகாப்பு படையினரால் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததும் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதே வேளையில் ஞாயிற்றுக்கிழமை வீட்டிலிருந்து வெளியேறிச் சென்ற குடும்பஸ்தர் ஒருவரைக்காணவில்லையென உறவினர்கள் தேடுதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சம்பவம் ஒன்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனுக்கு தெரிந்திருந்தமையால் அவர் உடனே காணாமல் போனவரைத்தேடிக்கொண்டிருந்த உறவினர்களைச் சம்பவஇடத்துக்குஅழைத்து வந்து இறந்தவரை அடையாளம் காட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார்.

இறந்தவர் தாழ்வுபாடு கிராமத்தைச் சேர்ந்த மீனவரான அகஸ்ரின் அந்தோனிதாஸ் குரூஸ் (வயது 54) என இறந்தவரின் மைத்துனரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் 11 மணியளவில் வீட்டை விட்டு வெளியேறினார் எனவும், பின் இவர் இரவு வீடு திரும்பாதமையால் இவரைத் தேடித் தாங்கள் சென்றனர் எனவும் உறவினர்கள் ஆரம்ப விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

தீயில் எரிந்த நிலையிலேயே இவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த மன்னார் மாவட்ட நீதிவான் ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா பூர்வாங்க விசாரணையை மேற்கொண்டார். சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்குப் பின் உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்க அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னர் பொலிஸார் புலன் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

### ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வைக் கோரும்

# தமிழ் தலைமைகளின் பெருந்தன்மையை சிங்களத் தலைமைகள் மெச்ச வேண்டும்

## புகழ்கின்றார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

தமிழ் தலைமைகள் அதிகாரப் பகிர்வுக்கு அழுத்தம் கொடுக்கின்றனரேதவிர, பிரிவினையை ஒருபோதும் தூண்டவில்லை என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

தெல்கொடை பிரதேசத்தில் இடம்பெற்ற பௌத்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பௌத்த மதத்திற்கு முன்னுரிமை கொடுத்து, ஒற்றை ஆட்சிக்குள் அதிகார பகிர்வு வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தே, தமிழ் தலைமைகள் அழுத்தம் கொடுக்கின்றதே தவிர, பிரிவினையை ஒரு போதும் தூண்டவில்லை. தமிழ் தலைமைகளின் பெருந்தன்மையை சிங்களத் தலைமைகள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். வடக்கு – கிழக்கு இணைப்பு தொடர்பில் அரசாங்கம் எந்தவித கலந்துரையாடலையும் முன்னெடுக்கவில்லை. தமிழர் தரப்பும் இது வரையில் வடக்கு – கிழக்கு இணைப்பு குறித்து அரசாங்கத்துடன் பேச்சுகளை முன்னெடுக்கவுமில்லை." – எனவும் அவர் குறிப்பிட்டார். (உ)


ஆசிரியர்: வே.அன்பழகன் அவர்களின்

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2018 வகுப்புகள் ஆரம்பமாகின்றன**

யாழ்ப்பாணத்தில்:
**அன்பொளி கல்வியகம்,**
யாழ். இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்:
**அன்பொளி கல்வி நிலையம்,**
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

அனுமதிகளை 25.09.2017 திங்கட்கிழமையிலிருந்து 02.10.2017 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 – 5.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விவரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

— சின்ன விழி அசைத்துச் சிரித்து வரும் சித்திரங்களை அள்ளி அனைத்து அரிய கல்வி மகிழ்வுடன் ஊட்டிடுவோம் —

- இயக்குநர்கள்.


# கைதி தாக்கப்பட்டார் என உறவினர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த விளக்கமறியல் கைதி ஒருவர் மோசமாகத் தாக்கப்பட்டார் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினர் நேற்றுக் காலை இந்த முறைப்பாட்டை பதிவுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்த கைதி மீது சிறைச்சாலை அதிகாரிகள் கடுமையாகத்தாக்கிய சம்பவம் கடந்த சனியன்று இடம்பெற்றதாகப் பாதிக்கப்பட்ட கைதியின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்குஉள்ளன கைதி புத்தளத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

குற்றச் செயல் ஒன்றிற்காகச் சந்தேகத்தின் பேரில் இவர் கைதுசெய்யப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.